இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஆகஸ்ட் 2011 August | இதழ் 247 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION









21 வது ஆண்டு
th Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# விரைவாக முடியுங்கள்....

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் சம்பந்தமான மேலும் பல தகவல்களை உரிய ஆதாரங்களுடன் சனல்-4 ஆவணப்படுத்தி வருகின்றது.

மகிந்த அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் இதன் பின்னணியில் எவ்வாறு செயற்பட்டனர் என்பது இப்போது பகிரங்க ரகசியம்.

'மக்கள் மீட்புப் பணி' என்ற பெயரில் இடம்பெற்ற அராஜகம், இந்தியாவின் 'அமைதிப்படை' இருபதாண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்திய கொடுமையின் ஒரு தொடர்ச்சியாகவே பார்க்கப்பட வேண்டியது.

முள்ளிவாய்க்கால் யுத்த வலயத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களின் சூத்திரதாரியாக மகிந்த ராஜபக்சவின் உடன்பிறப்பு கோதபாய ராஜபக்ச இருந்துள்ளார் என்பதை சனல்-4 காணொளி அம்பலப்படுத்தியுள்ளது.

களத்தில் நின்ற படைத்தளபதி சவேந்திர சில்வாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கோதபாய, "யாரைக் கொலை செய்தாலும் பரவாயில்லை; வேலையை விரைவாக முடியுங்கள்" என்று இட்ட உத்தரவானது, "சரணடைபவர்கள் - வெள்ளைக் கொடியுடன் வருபவர்கள் - இடம்பெயர்பவர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்று விடுங்கள்" என்றவாறு உடனடியாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் இராணுவத் தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா 'சன்டே லீடர்' பத்திரிகைக்கு இரண்டாண்டுக்கு முன்னர் தெரிவித்த உண்மை இன்று ஊர்ஜிதமாகியுள்ளது.

அடையாளம் காணப்பட்டுள்ள போர்க்குற்றவாளிகளான கோதபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராகவும், சவேந்திர சில்வா ஐ. நா. மன்றில் இலங்கையின் நிரந்தரத் தூதுவராகவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

ஐ.நா நிபுணர்குழு தயாரித்த போர்க்குற்ற அறிக்கையானது முதுகன்னி போன்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கு உயிரூட்டினால் மட்டுமே இலங்கை அரசை போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த முடியும்.

செப்டம்பர் மாதத்தில் கூடவிருக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபையே இதற்குரிய இடம். இதனைச் செய்து முடிக்க ஏதுவான சாட்சியாக சனல்-4 அமைந்துள்ளது. 'எல்லாமே பொய்' என்னும் கொலைகாரரின் கூற்று பொய் என்பதை நிரூபிப்போம்!

காலமும் நேரமும் சேர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, விரைவாகச் செய்து முடிப்போம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph


**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்.டி.பி. தலைவர் ஜாக் லேட்டன் விபரம் தெரிவிக்கப்படாத புதிய புற்று நோயினால் அவதி!



### ஓய்வுடனான சிகிச்சைக்காக நீண்ட வைத்திய விடுப்பு!

கடந்த பொதுத் தேர்தலில் ஒரு சாதனை படைத்து கனடிய நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி தலைவராக பதவியேற்ற என்டி.பி கட்சித் தலைவர் ஜாக் லேட்டன், கடும் சுகவீனம் காரணமாக நீண்ட வைத்திய விடுப்பில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே 'புறஸ்டேட் கான்சர்' நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்த இவர், அது குணமடைந்து வரும் நேரத்தில் மற்றுமொரு புற்று நோயினால் பீடிக்கப்பட்டதால், அவரது உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டது.

'எதையும் தாங்கி வெற்றி பெறும் மனோபலம் என்னிடம் உண்டு. மீண்டும் வருவேன்" என்று கடந்த மாதக் கடைசி வாரம் திடீரென நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஜாக் லேட்டன் தெரிவித்தார்.

தமது மனைவி ஒலிவியா சௌ (எம்.பி) சகிதம் ஊடகவியலாளரை இவர் சந்தித்தபோது, பலரால் அவரை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை.

கட்சியின் மேலிடத்துக்கு இவர் செய்த சிபார்சின் பிரகாரம், கியுபெக் மாகாணத்திலிருந்து தெரிவான நைக்கோல் டர்மல் (Nycole Turmel) எம். பி கட்சியில் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜாக் லேட்டன் வைத்திய சிகிச்சைக்கான விடுப்பில் இருக்கும் காலத்தில் கட்சி பல சவால்களைச் சந்திக்க நேரிடலாம் என்றும், உட்பிளவுகள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் சில ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.●

# கனடிய வந்தேறு குடிகள் சந்திக்கும் எதிர்பாராத புதிய சவால்கள்!

## 1,800 பேரின் பிரஜாவுரிமை மீளப்பெறப்படுகின்றது; மேலும் பலரது கோவைகள் துரித பரிசீலனையில்!

கனடாவில் பிரஜாவுரிமை பெற்று வாழும் வந்தேறு குடிகளில் 1,800 பேரின் பிரஜாவுரிமையை மீளப்பெற (Reviking their Canadian Citizenship) கனடிய குடியுரிமைத் திணைக்களம் முடிவெடுத்துள்ளது. இவர்களுக்கான உத்தியோகபூர்வ கடிதம் தனித்தனியாக அடுத்த சில நாட்களில் அனுப்பி வைக்கப்படும்.

தவறான தகவலை வழங்கிப் பிரஜாவுரிமையைப் பெற்றது, கனடிய பிரஜாவுரிமையை அதன் சலுகைகளைக் கருதிப் பயன்படுத்தியது, பொய்யான வசிப்பிடத் தகவல்களை வழங்கியது, அடையாள மோசடி போன்றவைகள் காரணமாக இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சுமார் மூன்று வருடகாலமாக ஆர்.சி.எம்.பியினர் நடத்திய ஆழமான விசாரணையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கனடிய பிரஜாவுரிமை விற்பனைக்குரியதல்ல (Not for sale) என்று சுட்டிக்காட்டியுள்ள குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி, கனடாவின் தாராள மனப்பான்மையை எவரும் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்க முடியாது என்று எச்சரித்துள்ளார்.

1,800 பேரில் கணிசமானவர்கள் கனடிய பிரஜாவுரிமையைப் பெற்ற பின்னர் வெளிநாடுகளில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. பிரஜாவுரிமையை மீளப்பெறும் கடிதத்தைப் பெறுபவர்கள் அதனை ஆட்சேபித்து கனடிய சமஷ்டி நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும்.

1977ஆம் ஆண்டில் கனடிய பிரஜாவுரிமையை மீளப்பெறும் சட்ட விதிகள் நடைமுறைக்கு வந்தனவாயினும், கடந்த 34 ஆண்டுகளிலும் 63 பேரின் பிரஜாவுரிமை மட்டுமே மீளப்பெறப்பட்டது. பிரஜாவுரிமையை மீளப்பெறுவதென்பது நிரந்தர வசிப்பிட உரிமையை (Permanent Resident) ரத்துச் செய்வதாகாது.

## தேடப்படும் 30 சர்வதேச யுத்தக் குற்றவாளிகளின் பெயர் விபரத்தை அமைச்சர் பகிரங்கப்படுத்தினார்!

கனடாவில் குடியிருப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பின்னர், தலைமறைவாக வசித்து வரும் சர்வதேச போர்க் குற்றவாளிகள் முப்பது பேரை கனடிய குடிவரவு அமைச்சு அடையாளம் காட்டியுள்ளது. இவர்களைக் கண்டுபிடிக்க கனடிய பொதுமக்களின் உதவி கடந்த மாதம் கோரப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களின் புகைப்படம், மற்றும் பெயர், போர்க்குற்றம் புரிந்த நாடு ஆகிய விபரங்களை கனடிய எல்லைப் பாதுகாப்புச் சேவையினர் கடந்த மாதம் நடுப்பகுதியில் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

தேடப்படுபவர்களாக அறிவிக்கப்பட்டவர்களில் பலரும் சோமாலியா, முன்னாள் யுகோசிலோவியா, ஹொன்டுறாஸ், பெரு உட்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் இருவர் இலங்கையர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டில் லிபரல் ஆட்சியின் போதும் கனடாவில் தலைமறைவாகவிருந்த போர்க் குற்றவாளிகளின் பட்டியலைப் பகிரங்கப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாயினும், பின்னர் அது கைவிடப்பட்டது. தனிநபர் பாதுகாப்புக்கு அது முரணானதாகவிருக்கும் என்பதால் லிபரல் அரசு அதனைக் கைவிட்டது.

கைதாகியுள்ள ஐவரில் சிலர் தங்கள் கைதுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளனர். அதேசமயம், மேலும் சில போர்க் கைதிகள் தொடர்பான விபரங்களைக் கனடிய எல்லைப் பாதுகாப்புச் சேவையினர் சேகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

வெளிநாட்டவர்கள் கனடாவுக்கு வருகை தருவதற்கான பத்து வருடங்கள் செல்லுபடியாகும் விசா (multiple visitor visa) வழங்கும் திட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலுள்ள கனடியத் தூதரகங்களின் மதிப்பீட்டில் நம்பக்கைக்குரியவர்கள் என்று கணிக்கப்படுபவர்களுக்கு இந்த விசா வழங்கப்படும். குறிப்பிட்ட பத்து வருடத்துக்குள் எந்தக் கட்டுப்பாடுமின்றி இந்த விசா பெற்றவர் கனடாவுக்கு எத்தனை தடவையும் வந்து செல்ல முடியும்.

ரொறன்ரொ நகரின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்காக அதன் சேவைகளில் பலவற்றை வெட்டுவதற்கு நகர முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார். நகரிலுள்ள சில நூலகங்களை மூடுவது, நகரக் காவலர்களுக்கான நிதியில் வெட்டுவது, ரி.ரி.சி போக்குவரத்துச் சேவையைக் குறைப்பது என்பவை வரியிறுப்பாளரின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

'பெல் கனடா' நிறுவனம் ரொறன்ரோ நகருக்குள் இன்னுமொரு area code இலக்கத்தை அறிமுகம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. தற்போது சேவையிலுள்ள 416 மற்றும் 647 இலக்கங்கள் புதிய தொலைபேசி இணைப்புகளை வழங்க முடியாதளவுக்கு நிரம்பியுள்ளன. அடுத்த சில மாதங்களுக்குள் மூன்றாவது area code இலக்கம் நடைமுறைக்கு வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக மட்டத்தில் வசிப்பதற்குச் செலவு அதிகமான நகரங்களில் ரொறன்ரோ 59வது இடத்தை வகிக்கின்றது. வன்கூவர் 75வது இடத்திலுள்ளது. ஆனால், கனடாவுக்குள்ளிருக்கும் நகரங்களில் செலவு கூடிய நகரங்களில் ரொறன்ரோவே முதலிடத்தை வகிக்கின்றது. கனடாவின் தலைநகரமான ஒட்டாவா, வசிப்பதற்கு செலவு குறைந்த நகரமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அங்கோலாவின் லுவான்டா உலக மட்டத்தில் முதலிடத்தை வகிக்கின்றது.

ஒன்ராறியோவில் வசிக்கும் தம்பதிகள் விவாகரத்துப் பெற விரும்பினால், சேர்ந்து வாழ்வதற்கான அனுகூலங்களை விபரிக்கும் செயலமர்வில் முதலில் பங்குபற்ற வேண்டுமென்ற புதிய விதி அமுலுக்கு வந்துள்ளது. அதன் மூலம் இணக்கத்துக்கு வரமுடியாவிட்டால் மட்டுமே விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்ய முடியும். நினைத்த மாத்திரத்தில் விவாகரத்துக்குச் செல்வதைப் பெருமளவில் இது குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்தாண்டு ஆரம்பத்தில் உலக சனத்தொகை 700 கோடியை எட்டிவிடுமெனவும், 2050ஆம் ஆண்டில் 900 கோடியாகுமெனவும் ஐ. நா. மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அவ்வேளையில் உலக சனத் தொகையில் அரைப்பகுதியை ஒன்பது நாடுகள் கொண்டிருக்கும். அதில் இந்தியா, அமெரிக்கா, சீனா, பங்களதேஷ், பாகிஸ்தான் ஆகியன முன்னணி வகிக்கும். நைஜீரியர, எதியோப்பியா, கொங்கோ, தான்சானியா ஆகியவை அடுதத்த இடங்களை வகிக்கும்.

செவ்வாய்க் கிரகத்தினைப் போன்ற கரடு முரடான நிலப்பரப்பில் செலுத்தக்கூடிய வாகனம் தயாரிக்கும் உலகளாவிய ரீதியிலான முதலாவது போட்டியில் ரொறன் ரோவில் இயங்கும் யோர்க் பல்கலைக் கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. யோர்க் பல்கலைக்கழகம் இதற்கென 13,000 டாலர்களைச் செலவிட்டு வாகனத்தைத் தயாரித்தது. போலந்து நாட்டின் பயாலஸ்ரொக் பல்கலைக் கழக அணி முதலிடத்தைப் பெற்றது. வாட்டர்லு பல்கலைக் கழக அணியும் இப்போட்டியில் பங்குபற்றியதாயினும் பரிசு எதனையும் இது பெறவில்லை.

## தாகமாக இருக்கிறதா? இவைகளைச் சாப்பிடலாம்!

இப்போது கடுமையான வெப்பம் நிலவுகிறது. இதனால் அடிக்கடி தொண்டை காய்வது, உதடுகள் வெடிப்பது, நாக்கு வரள்வது போன்ற தன்மைகள் காணப்படும். உடலுக்குத் தேவையான நீர்த்தன்மை குறைவதே இதற்குக் காரணம்.

தினமும் ஆகக்குறைந்தது எட்டு கிளாஸ் நீர் பருக வேண்டும். கிளாசின் அளவு 8 அவுன்சாக இருக்க வேண்டும். ஆக, தினமும் 2 லீட்டர் நீர் பருக வேண்டுமென்று மருத்துவர்கள் கூறுகின்றனர். நாம் பருகும் குளிர்பானங்கள், காப்பி, தேநீர் போன்றவைகளிலிருந்தும் நீரினை உடம்பு பெறுகின்றது.

இது தவிர ஒன்பது வகையான காய்கறி மற்றும் பழங்களையும் நீருக்குப் பதிலாக உட்கொள்ள சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

தோடம்பழம், கிறேப் பழம் (citrus fruits), செறிப் பழங்கள் (Cherries), சுச்கினி (Zucchini), அன்னாசிப்பழம் (Pine apple), பூசினிக்காய் (Pumpkin), கியுகம்பர் (Cucumber), ஆப்பிள் பழங்கள் (Apples), முங் பீன்ஸ் (mung beans), சமைக்கப்பட்ட ஓட் சாப்பாடு (Cooked oat meal) என்பவை நிறைவான நீர்த்தன்மையுள்ள உணவு வகைகள் என்று கனடிய சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

உடலில் நீர்த்தன்மை குறையுமாயின் (dehydrate) பலவித நோய்களும் ஏற்படலாம்.

## புளூ வைரசுக்கு டயட்டிங் உதவலாம்!


குளிர் காலங்களில் டயட்டிங் இருப்பது புளூ வைரஸ் பரவுவதற்கு உதவலாம் என மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளனர். உட்கொள்ளும் கலோரிகளின் அளவைக் குறைப்பதனால் எதிர்த்துப் போரிடும் கலங்களின் சக்தி குறைக்கப்படுகின்றது. இதனால் வைரசுத் தொற்றுகளை எதிர்ப்பதற்கு சக்தி போதாமல் போவதால் நோய்த் தாக்கம் கூடுதவதற்கு வாய்ப்பாகின்றது. கலோரி குறைந்த டயட்டிங் இருப்பதை வெம்மையான காலங்களில் செய்வது உகந்தது என்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Canadian Tamils unveil memorial, remember victims of Black July







Glen Murray, Member of Provincial Parliament (MPP) for Toronto Centre, working with Canadian-Tamil youth, unveiled a plaque at a Tamil Memorial Tree Planting event at Evergreen Brick Works – a community environmental centre, Saturday honoring the tens of thousands Tamil lives lost in the struggle for human rights in Sri Lanka. Erected hours before the Black July remembrance event, the memorial commemorates the events of Black July 1983 to Mu'l'livaikkaal of May 2009, the organizers said. Later in the day, in a memorial event organized by National Council of Canadian Tamils (NCCT), Canadian-Tamils gathered at Queens Park –Toronto, to remember the victims of Black July- bracing the heavy rains.

Throughout the event, copies of the Channel 4 documentary-Sri Lanka's Killing fields- were distributed to Canadians by members of Tamil Youth Organization-Canada (TYO) as part of their "G for Genocide" campaign, aimed at highlighting the plight of Eezham Tamils.

At the Black July Remembrance event, four distinguished speakers from the broader Canadian society spoke.

Former Liberal MP Borys Wrzesnewskyj read a statement from the Liberal Party of Canada's interim leader Bob Rae. Rae unconditionally provided his support for an international war crimes inquiry into the events of the 2009 Sri Lankan conflict. Former Liberal MP Rob Oliphant read a statement from Liberal MP Jim Karygiannis who also provided his support for an international probe.

Glen Murray, Liberal MPP, was applauded for establishing the first memorial in Canadian history at the Evergreen Brick Works Park for the victims of Tamil genocide from Black July 1983 to Mu'l'livaikkaal 2009. Murray spoke about the unique contributions by Tamils to greater Canadian society, and extended his support for the Tamil struggle for political and human rights.

Angela Reignier, Executive Director of the University of Toronto Students' Union, spoke of the legitimate Tamil struggle for self-determination and political independence. Ms. Reignier had earlier joined the Tamil community during the occupation of the Gardiner Expressway in 2009, and was subsequently arrested and was barred from participation in similar events for three months.

NDP MPP Michael Prue of Beaches East York also attended to read a statement on behalf of Andrea Horwath, leader of the Ontario NDP, but heavy rain forced the organizers to shorten the event.

The Evergreen Park event also included the planting of a Canadian Maple Tree to symbolize life and growth for the Tamil people's struggle for self-determination.

Members of the Human Rights and Advocacy Council for the Canadian Tamil Youth Alliance (CTYA) were present to assist with the planting of the tree.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# தியானம் நோய் தீர்க்குமா?

தியானம் எமது பாரம்பரிய வாழ்க்கை முறையோடு இணைந்தது. புராணங்களில் நாம் அறிந்த ஞானிகளும் முனிவர்களும் இவற்றைக் கடைப்பிடித்து ஆன்மீக உச்சங்களை எட்டியுள்ளார்கள்.

அவர்கள் மட்டுமின்றி இன்றைய சாமிகளும் ஆசாமிகளும் கூட இவற்றைப் பற்றிப் பேசுகிறார்கள். தொடர்ந்து செய்யும்படி ஆலோசனைகளும் வழங்குகிறார்கள். பல ஆன்மீக நிறுவனங்கள் இலவச தியான வகுப்புகளை நடத்தவும் செய்கின்றன.

கீழைத்தேய வாழ்வியலோடு கூடிய தியானம் இப்பொழுது மேலை நாடுகளிலும் பிரபலமாகிவிட்டது.
அமெரிக்க அரசின் ஆதரவோடு 2007ல் செய்யப்பட்ட ஒரு ஆய்வின் பிரகாரம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோரில் 9.4 சதவிகிதமானோர் அதற்கு முந்தைய ஒரு வருட காலப்பகுதியில் தியானம் செய்திருப்பது தெரியவந்தது.

தியானங்கள் பல வகைப்படும். ஆயினும் அவற்றின் அடிப்படை நோக்கமானது ஒன்றுதான். மனதை அமைதிப்படுத்தி, உடலைத் தளரச் செய்து உளவியல் ரீதியான சமநிலை நோக்கி முன்னேறுவதுதான். பொதுவாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் நோய்களிலிருந்து விடுபட்டு நல்லாரோக்கியமான நிலையை அடைவதற்கான முயற்சியாகக் கொள்ளலாம்.

தியானம் செய்வதற்கு அடிப்படைத் தேவைகள் என்ன?

முக்கியமாக அமைதியான சூழல் தேவை. புறச் சூழலுக்கள் எம்மை ஈர்த்துவிடும் புலன்கள் ஐந்து ஆகும். கண், காது, மூக்கு, வாய், உடல் ஆகியவற்றை ஐம்புலன்கள் என்றார்கள். இவற்றால் எமது சிந்தனைகள் திசைமாறச் செய்யாத அமைதியான இடம் தேவை.

அமைதியான சூழல் தேவை
தியானம் செய்யும்போது எமது உடல் சௌகர்யமாக இருக்க வேண்டும்.
கால்களை மடக்கிப் பத்மாசனம் போட்டு, முதுகை நேர்கம்பமாக நிமிர்த்தி வைத்து, கையிரண்டையும் முழங்கால்கள் மேல் வைத்திருப்பது ஆன்றோர் வழி வந்த முறை. நின்றோ,
நடந்தோ, நிமிர்ந்தோ, படுத்தோ கூடத் தியானம் செய்யலாம். எவ்வாறாயினும் சௌகரியமாக இருந்தால் போதுமானது. ஆயினும் சொகுசு மிகுந்து தூங்காதிருந்தால் சரி!

முழுக் கவனமும் ஏதாவது ஒன்றில் தியானம் இருக்கும்போது முழுக் கவனமும் ஏதாவது ஒன்றில் பதிந்திருக்க வேண்டும்.
ஒளியைத் தியானம் பண்ணுவர் சிலர், ஒரு மந்திரத்தில், அல்லது நாமத்தில் கவனத்தை விழுத்துவர் சிலர். தனக்குகந்த கடவுளின் உருவத்தில் அல்லது உருவமில்லா உள்ளொளியில் அமைதி காண்பர் வேறு சிலர். தனது சுவாசத்தையே நினை பொருளாகக் கொள்வோரும் உண்டு.

மனைவியைச் சதாநேரமும் தியானம் பண்ணித் தாஜா செய்வது வேறு!

மனதைத் திறந்து வைத்திருத்தல் மற்றொரு முறையாகும். கவனத்தை திசை திருப்பும் விடயங்களை ஓர்மமாக ஒதுக்கித் தள்ளாமல் வருவதையும் போவதையும் இயல்பாக வந்துபோக விட்டுவிட்டு அதில் சிந்தனையை ஆழ்த்தாமல் திறந்த வெளியாக வைத்திருப்பதும் உண்டு.

நோய் தீர்க்க உதவுமா?
மனம் சார்ந்த நோய்கள்
ஒருவரது வாழ்வில் நெருக்கீடு அதிகரித்தால் அதனால் மனப் பதகளிப்பு, மனச்சோர்வு போன்றவற்றிற்கு அவர் ஆளாகலாம். இவை தூக்கக் குழப்பம், கோபம், எரிச்சல், மனத்திருப்தியின்மை ஆகியவற்றைக் கொண்டு வரலாம். இத்தகைய உளவியல் சார்ந்த பிரச்சனைகளின் தாக்கத்திலிருந்து விடுபட தியானம் நிச்சயம் உதவும்.

உடல் சார்ந்த நோய்கள்
ஆனால் இவற்றைத் தவிர உடல் சார்ந்த நோய்களுக்கும் உதுவுமா? பல மருத்தவ ஆய்வுகள் உதவலாம் எனக் கோடி காட்டினாலும் தெளிவான முடிவுகள் கிடையாது என்றே சொல்ல வேண்டும்.

ஆயினும் பல உடல் சார்ந்த நோய்கள் மன ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஒவ்வாமைகள், ஆஸ்த்மா, இருதய நோய்கள், மூட்டு வலிகள், உடல் வலிகள், போதைப் பொருள் பாவனை, புகைத்தல், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய்கள், உடற் களைப்பு, அதீதமாக உண்ணலும் எடை அதிகரித்தலும் போன்றவை பல்வேறு மனரீதியான தாக்கங்களையும் கொண்டு வருகின்றன. இவற்றின் தாக்கத்தைக் குறைக்க தியானம் நிச்சயம் உதவும்.

மூட்டு வலிகள், உடல் வலிகள் தீர்க்க உதவுமா?
ஆயினும் ஒரு விடயத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.
வழமையான மருந்துகளுக்குப் பதிலாக தியானம் முழுமையாகக் கைகொடுக்காது. எனவே அத்தகைய நோய்களை தியானம் முற்றாகப் பூரணமாக்கும் என்ற எண்ணத்துடன் அவற்றைச் செய்ய வேண்டாம்.
நோய்க்கான மருத்துவத்தைத் தொடர வேண்டும். அதற்கு ஒத்தாசையாக தியானமும் உதவும்.

எவ்வாறு உதவுகிறது?
எமக்கு ஏற்படுகிற நெருக்கீடுகள் பற்றி ஒரு முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் அணுகுவதற்குத் துணை செய்யும். நெருகீட்டைச் சமாளிப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கான ஆற்றலை வளர்க்கிறது

(33ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சலின் அடுத்த புரட்சி

மின்னஞ்சலில் ஜிமெயிலுக்கு பிறகு அடுத்த புதுமை அரங்கேறியிருக்கிறது. அதன் பெயர் ஷார்ட்மெயில். டிவிட்டரும், பேஸ்புக்கும் மின்னஞ்சலுக்கான இடத்தை நிரப்பி வருவதாக கூறப்பட்டு வரும் காலத்தில் அறிமுகமாகியிருக்கும் ஷார்ட்மெயில் மின்னஞ்சல் சேவையை சுருக்கி அதன் வீச்சை அதிகமாக்கியிருக்கிறது.

அதாவது பெயருக்கேற்ப இது மின்னஞ்சல் மூலம் அனுப்பக்கூடிய செய்திகளை சுருக்கியிருக்கிறது. ஆம் ஷார்ட்மெயிலை பயன்படுத்தும் போது கடிதம் போல நீளமாக எல்லாம் எழுதி கொண்டிருக்க முடியாது. அதிகபட்சம் 500 எழுத்துக்களுக்குள் விடயத்தை சொல்லி விட வேண்டும்.

டிவிட்டரில் எப்படி அதிகபட்சம் 140 எழுத்துக்கள் என்ற கட்டுப்பாடு இருக்கிறதோ அதே போல ஷார்ட்மெயிலில் 500 எழுத்துக்களில் தொடர்பு கொள்ள வேண்டும். நீங்கள் அனுப்பும் செய்திகள் எப்போதுமே சுருக்கமாக சொல்ல வந்ததை மட்டும் சொல்வதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் இந்த சேவையை இன்பாக்ஸில் வந்து குவியும் படிக்கப்படாத மின்னஞ்சல்களால் திணறிப் போகிறவர்கள் நிச்சயம் விரும்புவார்கள். அதோடு மின்னஞ்சல் சுமை என்பதும் இல்லாமல் போய்விடும்.

அது மட்டும் அல்ல மின்னஞ்சலோடு ஒட்டி கொண்டு வரும் இணைப்புகள் புகைப்படங்கள் போன்றவற்றுக்கும் இங்கு இடமில்லை. இது வெறும் தகவல் தொடர்புக்கு மட்டும் தான்.

ஷார்ட்மெயிலை நீங்கள் பயன்படுத்த துவங்கினீர்கள் என்றால் உங்களுக்கு வரும் மின்னஞ்சல்களும் ஷார்ட் அண்டு ஸ்வீட்டாக இருந்தாக வேண்டும். அதாவது அவையும் 500 எழுத்துகளுக்குள் இல்லை என்றால் திருப்பி அனுப்பப்பட்டு விடும் 500 எழுத்துகளுக்குள் தொடர்பு கொள்ளுங்கள் என்னும் செய்தியோடு.

மின்னஞ்சலை எளிமையாக்க மட்டும் அல்ல அதனை சிறந்த முறையில் நிர்வகிக்கவும் இது பேருதவியாக இருக்கும். எந்த மின்னஞ்சல் வந்தாலும் உடனே படித்து பார்த்து விடலாம். தள்ளிப்போடுவதோ மின்னஞ்சல்களை குப்பை போல சேரவிடுவதோ நேராது.

டிவிட்டர் யுகத்திற்கு ஏற்ப ஷார்ட்மெயில் ரத்தின சுருக்கமாகியிருப்பதோடு சமூக வலைப்பின்னல் வசதியின் சாயலையும் கொண்டுள்ளது. ஷார்ட்மெயிலில் செய்திகளை அனுப்பும் போதே அது ரகசியமானதா அல்லது பொதுவில் பகிரக்கூடியதா என்பதை தீர்மானித்து கொள்ளலாம்.

ரகசியமானது என்றால் யாருக்கு அனுப்புகிறோமோ அவர் மட்டுமே பாக்க முடியும். பொது என்றால் யார் வேண்டுமானாலும் படிக்கலாம். பதில் அனுப்பலாம். இப்படி மின்னஞ்சல் வாயிலாகவே உரையாடலில் ஈடுபடலாம்.

பேஸ்புக் பயன்படுத்துபவர்கள் சுவர் செய்தி மூலமே நண்பர்களை தொடர்பு கொண்டுவிடுவதால் மின்னஞ்சலின் தேவையே இல்லாமல் போவதாக சொல்லபடுகிறது. ஷார்ட்மெயில் பிரபலமானால் இதன் மூலமே நண்பர்களுடன் கருத்து பரிமாற்றம் செய்யமுடியும் என்பதால் பேஸ்புக் தேவையில்லாமல் போகலாம்.

ஷார்ட்மெயிலில் முகவரி பெறுவதும் மிகவும் சுலபமானது. டிவிட்டர் கணக்கு வைத்திருப்பவர்கள் அதன் மூலமே புதிய முகவரி பெறலாம். ஐபோன் ஆன்டிராய்டு போன்களுக்கு ஏற்ற வடிவிலும் வருகிறது. மின்னஞ்சலை புதுப்பிக்க வந்த புதுமையான் சேவை இந்த ஷார்ட்மெயில் என்று மனதார பாராட்டலாம். ●

---

## பேஸ்புக்கிற்கு போட்டியாக 'கூகுள் பிளஸ்'

இணையத்தள ஜாம்பவானான கூகுள் நிறுவனம் பேஸ்புக்கிற்கு போட்டியாக "கூகுள் பிளஸ்" என்ற சமூக இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து கூகுள் நிறுவன பொறியியல் பிரிவு மூத்த துணை தலைவர் குண்டோத்ரா தனது வலைப்பதிவில் தெரிவித்துள்ளதாவது: சமூக இணையத்தளம் எனப்படும் சமூகவலை தளங்களில் மக்கள் பெரும் ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

அவர்களின் ஆவலை பூர்த்தி செய்யும் விதமாக சமூக இணையதளத்தை உருவாக்கும் முயற்சியில் கூகுள் நிறுவனம் ஈடுபட்டு வந்தது. தற்போது கூகுள் பிளஸ் என்ற பெயரில் புதிய தொழில்நுட்பத்திலான சமூக இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த புதிய சமூக இணையத்தளம் பேஸ்புக் தளத்தை ஒத்திருக்கும் போதிலும் அதைவிட கூடுதல் வசதிகளை பெற்றுள்ளது. இந்த புதிய சேவையினை ஆண்ட்ராய்ட் ஒபரேடிங் சிஸ்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கைத்தொலைபேசிகள் விற்கும் விற்பனை மையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும், தற்போதைய அளவில் சோதனைக்காக இது அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும் வருங்காலங்களில் பெரும் வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்க்கிள்ஸ், ஸ்பார்க்ஸ், ஹேங்அவுட்ஸ் மற்றும் மொபைல் உள்ளிட்ட சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாக இந்த சேவை வடிவமைக்கப்பட்டுள்ளது. கூகுள் பிளசில் உள்ள சர்க்கிள்கள், பேஸ்புக்கின் தகவல் பகிர்ந்து கொள்ளும் (இன்பர்மேசன் ஷேரிங்) சேவையை ஒத்திருத்தாலும், இது பேஸ்புக்கைப் போல தனது தகவலை அனைவருக்கும் தெரிவிக்காமல் உபயோகிப்பாளருக்கு நெருக்கமான நண்பர்களுக்கு மட்டும் தெரிவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதாவது உபயோகிப்பாளர்களின் உண்மையான தகவல்களை உரிய நண்பர்களுக்கு மட்டும் தெரிவிப்பது என்ற கொள்கையுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. கிளவுட் தொழில்நுட்பமுறையில் இங்கு போட்டோக்கள் பதிவேற்றம் செய்யப்பட உள்ளதால் இன்ஸ்டன்ட அப்லோட் இதில் சாத்தியமாகிறது. இது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாக அதுவும் பேஸ்புக்கில் இல்லாத சிறப்பம்சமாக இதில் வீடியோ சாட் வசதி உள்ளது. ஒரே சமயத்தில் பல நண்பர்களுடன் வீடியோ சாட் முறையில் தொடர்பில் இருப்பது இந்த சேவையின் மூலமே சாத்தியமாகி உள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

600 மில்லியன் பயனாளர்களைக் கொண்டு சமூக இணையதள உலகில் முடிசூடா மன்னனாக விளங்கிய பேஸ்புக்கிற்கு தங்கள் நிறுவனத்தின் கூகுள் பிளஸ் கடும் சவாலாக அமையும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# மொழியறிவும் விழியறிவும்

மொழி தொடர்பாடலின் வாகனம் என்பர். மனிதசாதியின் தொடர்பாடலுக்கு உதவுவது மொழி. மொழியப்படுவது மொழி. மொழிவது அறமொழியென்றார் மூதன்னை. வடமொழியிலே பாஷை என்பர். நாவலர் பாசை என்றே கையாண்டிருக்கிறார். ஆங்கிலம் சர்வதேச பாசையாய்விட்டது. நாவலர் இங்கிலீசு என்று எழுதியுள்ளார்.

மிருகங்களும், பட்சிகளும் கூடத் தமக்குட் பேசிக் கொள்ளும். நாட்டியத்திற் கண்சாடை ஒரு இலக்கணம். காதலர் கண்விழியாலே மொழி பேசுவர். பேச்சில்லாதவர் ஊமைகள். இவர்கள் மொழி கற்க கெலன் கெல்லர் வழி சமைத்தார். அவர்கள் பல்கலைக் கழகம் வரை செல்கிறார்கள். ஆக, மொழியொரு இன்றியாமையாத சாதனம்.

ஆங்கிலத்தில் Language என்பர். சுமார் ஈராயிரம் மொழிகள் உலகில் உள்ளன. வரிவடிவம் இல்லாத மொழிகட்கு வரிவடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீபுறா போன்ற மொழிகள் பேச்சில் இல்லை. இப்படிச் சீர்தூக்கின் எங்கள் தாய்மொழியான தமிழ் என்று பிறந்தனள் என்று இயம்ப முடியாத பழைமை மிக்க மொழி. ஆங்கிலத்தில் Mother Language என்ற பாவனையோடு Moter Tongue என்றும் மதிக்கப்படுகிறது. தாய்மொழியாம் தமிழ் வாய் மொழியாகவேனும் புலம்பெயர்ந்த சீமைகளில் இல்லாத நிலை உருவாகிறது. சமவேளை நிலை, செம்மொழிப் பெருமை மிக்க தமிழைப் பேசாவிடின் மொழி நிலைக்காது. இஃது பேருண்மை; அனுபவமும் கூட. இலத்தீன், சமஸ்கிருதம், ஹீபுறா அந்நிலைதான். மொழியும் விழியும் நமக்கு இரு அம்சங்கள். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது ஔவை வாக்கு.

"எண்ணென்பரஏனை யெழுத் தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பது வள்ளுவன் வாக்கு. எனவே கண்களைப் பாதுகாக்க வேண்டும். பாரதி "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற் கைகொட்டிச் சிரியாரோ எனப் பாடினார். கட்புலன் இன்மையின் செவிப்புலனாற் தம் அறியாமையை உணரட்டும் எனக் கைகொட்டுதலையும் எக்காளமிட்டுச் சிரிப்பதையும் கொண்டார் - அவரே கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற பெண்களின் கூட்டமென்று நையாண்டி செய்தார். இப்பாடல் பெண்கள் படியாமல் இருப்பதேனோ என்ற விழிப்புணர்ச்சியை எழுப்பப் பாடப்பட்டது. காலத்தின் தேவை அவர்களைப் படிக்க வைத்தது.

கட்பார்வை, விழிப்புலன் கல்வி இன்றியமையாதனவாம். வெளிநாட்டில் வதியும் நம் (தமிழ்) இனம் சிந்திப்பார்களாக. பாசையின் அவசியத்தின் பெருமையை உணர்த்த இங்கே மொழியும் விழியும் எடுத்தாளப்பட்டன. உயிரும், உயிர்ப்புமான மொழியும், சமயமும் இரு விழிகளே. எனவே கல்விச் செல்வம் குவிய வாசிப்பு முக்கியமாம்.

வாசிக்கக் கண் பார்வை தேவை. படிக்க வாசிக்க எழுத, எழுதியதை ஒப்பிட, திருத்தக் கண் தேவை. எனவே நம் அறிவுசார் வளர்ச்சிக்கு வாசிப்பதும், எழுதுவதும், வெளிப்படுத்துவதும் முக்கியமே. எனவே நாம் கட்புலனைப் பாவித்து எம்மைக் கல்விமான்கள் ஆக்கப் பயிற்சி செய்யக் கண் பல்வழிகளிலும் நல்லாயுதமாய்த் திகழ்கிறது. எனவே நாம் வாசிக்கும் பழக்கத்தை வளர்ப்போமாக. வாசிப்பு மனிதரைப் பூரணம் அடையச் செய்கிறது.

அறிவு விருத்திக்கு வாசிப்பு முக்கிய படியாகும். நம் இனத்தவர்கள் வாசிப்புப் பழக்கம் குறைந்தவர்கள். இதை நாமே நிவர்த்தி செய்ய வேண்டும்.

அயலவர், பிறர் இதற்கு உதவி புரிய முடியாது. பிற சமூக மக்களை அவதானியுங்கள். அவர்கள் தீவிரமாக உள்ளனர் வாசிப்பில். வீட்டிலே ஓர் நூலகம் வைத்திருப்போம். ஊர்தோறும் வாசிகசாலையை உருவாக்குவோம். உள்ளவற்றைப் பயன்படுத்துவோம். நாம் படிக்கும் பாடசாலைகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் உள்ள நூலகங்களைப் பயன்படுத்துவோம்.

எமது கைச் சோளிகளில் விருப்பமான, வாசிப்பதற்குகந்த நூல்களை, சஞ்சிகைகளைக் (கையோடு) கொண்டு செல்வோம். நாம் பஸ் வண்டிகளிற் பயணிக்கும் போது, ஏன் விமானங்களில் நீண்ட தூரம் பிரயாணஞ் செய்யும் போதும் நிறைய வாசிக்க வாய்ப்பளிக்கும் எமது வண்டி. வாகனங்களில் சிறந்த நூல்களை வைத்திருப்பது ஒரு நல்ல பழக்கம். ஏனெனில் நேரம் வீணாகப் போகாமல் நூல்களைப் படிக்கலாம்.

வைத்தியசாலையில் வைத்தியரிடம் போய்க் காவல் நிற்கும் நேரத்தை நன்கு பயன்படுத்தலாம். பிள்ளைகளைப் பாடசாலையில் இருந்து கூட்டி வரச் செல்லும் வேளையிலும், கணவன், மனைவியர் வேலையில் இருந்து அழைத்து செல்லக் காவல் நிற்கும் போதும் வாசிக்க நல்ல வாய்ப்புண்டு. நேரம் பொன்னானது. உணர்வோம்.

நாம் வீடுகளிலே, வன்முறைக் கலாசாரத்தைத் தூண்டும் நாடகங்களை, சினிமாக்களைப் பார்ப்பதிலும் உயரிய நூல்களை வாசிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொண்டால் நம் பிள்ளைகளை வாசிப்பிற்கு ஆற்றுப்படுத்தலாமன்றோ? கல்வி வல்லவராய் வளர வேண்டுமானால் எழுத்தாளராக, பேச்சாளராக, சிந்தனையாளராக நாம் வர வேண்டுமாயின் வாசிப்புப் பழக்கத்தை நடைமுறைப்படுத்துவோம்.

ஆக்க இலக்கியத் துறையில் நாம் பிரபல்யம் அடைய வாசிப்பதே உத்தமமாம். Reading make a man perfect. உலகிலே உயர்ந்த அறிவாளர்கள் வாசிப்பால் உயர்ந்தவர்களே.

எனவே நம் சமுதாயம் இதன் கனம் காத்திரத்தை உணர்ந்து வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொள்வோம். வாசிப்புக்கு இயைந்த ஒரு நேரத்தை கிரமமாக்கிக் கொள்வோமாக. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# கையெழுத்து

இன்று, 2 ஜூலை 2011, ஏர்னெஸ்ட் ஹெமிங்வே இறந்து 50 ஆண்டுகள் கழிந்துவிட்டன. உலகத்தின் பல பாகங்களிலும் இருந்து உலகப் பிரபலமான இந்த அமெரிக்க எழுத்தாளரை பல எழுத்தாளர்களும் வாசகர்களும் நினைவு கூர்வார்கள்.

ஹெமிங்வே அவருடைய கடைசிக் காலங்களில் அமெரிக்காவின் ஐடஹோ மாநிலத்தில் கெச்சம் என்ற சிறு நகரத்தில் வாழ்ந்தார். ஒருநாள் அதிகாலை அவருடைய துப்பாக்கியுடன் ஒருவித காரணமும் இன்றி அவர் நின்றதைக் கண்ட அவர் மனைவி மேரி பதறிப்போய் குடும்ப மருத்துவரை அழைத்தார்.

உடனேயே ஹெமிங்வேயை ஆஸ்பத்திரியில் அனுமதித்து அவருக்கு மின்சார அதிர்ச்சி வைத்தியம் செய்தார்கள். ஜூன் 30ம் தேதி ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பவும் ஹெமிங்வே வீட்டுக்கு வந்தார். ஜூலை 2 அதிகாலை ஹெமிங்வே தன்னிடமிருந்த பல துப்பாக்கிகளில் அவருக்கு மிகவும் பிடித்தமான பொஸ் துப்பாக்கியை எடுத்து அதற்குள் இரண்டு ரவைகளைப் போட்டு நிறைத்தார். துப்பாக்கி குழலை வாய்க்குள் விட்டு விசையை அழுத்தி தற்கொலை செய்துகொண்டார்.

ஹெமிங்வே தற்கொலை முயற்சியில் ஒருமுறை ஈடுபட்டவர் என்று தெரிந்திருந்தும் அவர் மனைவி துப்பாக்கிகளை ஒளித்து வைக்காதது ஏன் என்பதுதான் ஒருவருக்கும் இன்றுவரை புரியாத மர்மம்.

கடைசிக் காலங்களில் ஹெமிங்வேக்கு எழுதுவதற்கு சிரமமாகி வந்தது. ஒரு கார் பழசாவதுபோல, ஒரு சைக்கிள் பழசாவதுபோல, ஒரு பேனா பழசாவதுபோல மூளையும் பழசாகக்கூடும் என்பதை ஹெமிங்வே நம்ப மறுத்தார். முதுமை நெருங்க நெருங்க புது சிந்தனைகள் மூளையில் தோன்றுவது அவ்வளவு இலகுவாயிராது என்பதை அவர் உணரவில்லை.

'ஒரு நல்ல வசனம் வேண்டும். ஒரு நல்ல வசனம் வேண்டும்' என்பதே அவரது பிரார்த்தனை. ஹெமிங்வேக்கு திகில் வாழ்க்கையும் சாகசமும், அச்சமும், மரண பயமும் படைப்பூக்கிகளாக இருந்தன. விளையாட்டாக துப்பாக்கி குழலை எடுத்து வாய்க்குள் நுழைத்து விசையை மெல்ல மெல்ல அழுத்தி பயமூட்டுவது அவர் பழக்கம். அந்த நேரம் ஏதாவது புது சிந்தனை வெடிப்பு அவருக்கு நிகழும். அப்படி ஏதாவது சோதனை செய்தபோது துப்பாக்கி எதிர்பாராமல் வெடித்து அவர் இறந்து போனார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

வயது செல்லச் செல்ல அறிவு கொழுந்துவிட்டு வீசும் என்று ஹெமிங்வே நினைத்தார். புத்தி மழுங்கும் என்பதை அவர் அறியவில்லையா அல்லது தான் விதிவிலக்கு என எண்ணினாரா தெரியவில்லை. 'ஒவ்வொரு முறையும் ஒரு வார்த்தையை பார்க்கும்போது அது ஒரு புது வார்த்தையாகவே எனக்கு தெரிகிறது' என்று சொன்னவர் எந்த ஒரு வார்த்தையை பார்த்தும் அகத்தூண்டல் பெறாமல் அவதியுற்றார்.

இன்னும் பெரிய படைப்பு ஒன்றை படைக்கலாம் என நினைத்தார். படைப்புச்சம் இளமையில் ஏற்படுவது. ஐஸாக் அஸிமோவ் தன்னுடைய ஆகச் சிறந்த படைப்பான Nightfall சிறுகதையை அவருடைய 21 வது வயதிலே எழுதினார்.

அதற்கு பிறகு அவர் எழுதிய நூற்றுக்கணக்கான சிறுகதைகளில் ஒன்றேனும் அந்தச் சிறுகதையை தாண்டவில்லை. ஐன்ஸ்டைன் தன் உச்சமான கண்டுபிடிப்புகளை தன்னுடைய 26வது வயதிலேயே நிகழ்த்திவிட்டார். கற்பனையூற்று அடைத்து மூளை பாலைவனம் போல ஆகியிருந்த காரணம்தான் ஹெமிங்வேயை துப்பாக்கியை தூக்க வைத்தது போலும்.

பல வருடங்களுக்கு முன்னர் ஹெமிங்வே மெக்ஸிக்கோவுக்கு பயணம் போன இடத்தில் அவரைத் தொடர்ந்து துரத்திய இரண்டு ஏழைச் சிறுவர்கள் அவரிடம் பிச்சை கேட்டனர். ஹெமிங்வேக்கு தொந்தரவு பொறுக்க முடியவில்லை. அவர்களுக்கு அவர் ஒரு சதமும் கொடுக்க விரும்பவில்லை.

தன்னிடமிருந்த ஒரு பேப்பரையும் பேனாவையும் தூக்கி கொடுத்து 'ஏதாவது எழுதி பெரிதாக சம்பாதியுங்கள்' என்று சொல்லி ஆசீர்வதித்தார். பாவம், அந்தச் சிறுவர்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? அந்தப் பேப்பரில் கடன் பத்திரம் எழுதிக் கொடுப்பார்களா அல்லது சத்தியக் கடுதாசி தயாரிப்பார்களா?

ஒரு நல்ல வசனம் தோன்றாமல் தற்கொலை செய்துகொண்டவர் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ஹெமிங்வே. எழுத்தறிவில்லாத அந்த ஏழைச் சிறுவர்களுக்கு ஒரு நல்ல வசனம் கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்த்தார்? வெற்றுப் பேப்பரைக் கொடுக்காமல் அதிலே தன்னுடைய கையெழுத்தை வைத்து கொடுத்திருக்கலாம் என்று அவருக்கு தோன்றவில்லை.

பிச்சை எடுத்த சிறுவர்கள் இன்று பெரிய பணக்காரர்கள் ஆகியிருப்பார்கள்.

ஹெமிங்வேயின் கையெழுத்து நல்ல விலைக்கு போகிறதாம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# நுரை மகுடம்

தண்ணீருக்கும் தேநீருக்கும் அடுத்து உலகெங்கும் அதிகமாக அருந்தப்படுவது பியராகும். உலகில் அதிகம் அருந்தப்படும் மதுபானமும் பியர்தான். உலக மொழிகள் அனைத்திலும் பியர் என்ற சொல்லுக்கு நிகரான சொல் இருப்பினும் இப்போதைக்கு பியர் என்ற ஆங்கிலச் சொல்லே மொழி பெயர்க்க முடியாத சொல்லாக சுதேசிகளுக்கும் வெறியூட்டுகின்றது. பியர் என்பதற்கு தோப்பி என்ற பதம் தமிழில் இருந்தாலும் எவருக்கும் அதில் போதை ஏறியதாகத் தெரியவில்லை.

பார்லி, கோதுமை, சோளம், நெல் போன்ற தானியங்களிலிருந்து பெறப்படும் மாப்பொருளை நொதிக்க வைத்து பியர் தயாரிக்கப்படுகின்றது. பியருக்குரிய தனிச்சுவையான ஒருவித கசப்பை வழங்க ஹொப்ஸ் பூக்கள் (Hops flowers) சுவையூட்டிகளாக சேர்க்கப்படுவதுடன் அதன் காப்பு பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மூலிகைகள் பச்சிலைகள் பழங்கள் போன்றன இப் பூக்கள் கிடைக்காதவிடத்தில் பாவிக்கப்படும்.

மதுப்பிரியர்களுள் பலர் பியரை மோகிப்பதற்கு அதன் மதுசார அளவே காரணமாக கூறப்படுகிறது. பொதுவாக 4% முதல் 6% வரை மதுசாரம் பியரில் காணப்படும். சிலவகைகளில் 1% க்கும் கீழாகவும் மிக அரிதாக 20% க்கு அதிகமாகவும் இருப்பதும் உண்டு. உலகில் மதுசார அடர்த்தி கூடுதலாக உள்ள பியர் ஸாம் அடம்ஸ் MM II. அமெரிக்க போஸ்டன் தயாரிப்பான இது 24% த்துடன் $100.00 கனடாவில் விற்பனையாகின்றது. பிரேஸில் தாயாரிப்பான பிரம்மா (Brahma) பியர் மிக அதிகமாக உலகெங்கும் விற்கப்படுகின்றது. கனடாவில் 5% மதுசாரமுள்ள பிரம்மா பியர் 335 மி.லீட்டர் போத்தலில் $45.00 க்கு விற்கப்படுகின்றது. ஹெய்னிக்கன் (Heineken) கார்ல்ஸ்பேக் (Carlsberg) உலகெங்கிலும், மோல்ஸன் (Molson) லபாட் ப்ளு (Labatt Blue) கனடாவிலும், லயன் லாகர் (Lion Lager) இலங்கையிலும் மவுசு பெற்றவை.

ஏனைய மதுபானங்களை விட பியரில் வைட்டமின்கள் தாதுப்பொருட்கள் நார்ச்சத்துக்கள் அதிகமாகவும் நச்சு ரசாயனப் படிவுகள் குறைவாகவும் உள்ளதால் உடலுக்கு உற்சாகமும் எலும்பிற்கு வலுவும் சேர்வதாக ஆய்வுகள் நுரைக்கின்றன. எனினும் தினமும் பியர் குடிப்பவர்களின் முகம் சோபை இழப்பதும் மோகனாங்க வடிவம் குன்றுவதும் மனம்பாதிப்பதும் மூளை பிசங்குவதும் கசப்பான உண்மையாகும்.

உலகெங்கும் பியர் திருவிழா கொண்டாடப்படுவது உண்டு. ரொறன்ரோவில் இத்திருவிழாக்கள் வருடத்துக்கு இருமுறை நடைபெறும். 19 வயதுக்கு மேற்பட்ட 30,000 மக்கள் 120 வித்தியாசமான பியர் வகையை பார்வையிட்டு தமக்கு பிடித்தமானதில் மூழ்கி பின் உச்சபோதையில் எழுத்தெண்ணிப் பேசுவர். அல்லது உச்சஸ்தாயியில் பாடுவதாக கோவையாக பேசுவர். பயன்படாத வார்த்தைகள் பயன்படும். உடைந்த வார்த்தைகள் உற்சாக வார்த்தைகளாகும். பியர் மௌனத்தை துரத்தும்- மயக்கத்தை மனதில் கோதும்-அண்ட சராசரங்கள அசைக்கும் என்ற நம்பிக்கை அங்குள்ளோரிடம் கரைபுரளும். உற்சாகம் உல்லாசம் ஆரவாரம் அமளிதுமளி அழிச்சாட்டியம் போன்றவற்றால் திடல் நிரம்பி வழியும்.

சுமேரிய நாகரிகம் நின்க சி என்ற தெய்வத்தை பியருக்குரியதாக தோத்திரங்களால் அபிஷேகிக்கின்றது. கி.மு.9000 முதலே எகிப்து மெசபடோமியா பபிலோனியா பகுதிகளில் பியர் மயக்கமளிக்க, தண்டோடு கூடிய சிறு கருங்குவளை மலர்களே பழந்தமிழரின் பியரை 'ஜில்லிட' வைத்தன என கம்பர் உண்டாட்டுப் படலத்தில் தொன்மையைத் தெளிவாக்குகின்றார்.

உலகிலேயே ஆகக்கூடியதாக பெல்ஜியத்தில் 400 வகையான பியர் தயாரிக்கப்படுகின்றது. செக் குடியரசில் சேடாவார் என்ற ஆடம்பர பயணியர் விடுதி உண்டு. அங்குள்ள குளிக்கும் தொட்டி உட்பட எந்தக் குழாயை திருகினாலும் பியர் வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. வயகரா கலந்த பியர் ஒன்று இளவரசர் வில்லியம்ஸின் திருமண நாளன்று எழுக வில்லி எனும் பெயரில் இரட்டை அர்த்தம் தொனிக்க லண்டனில் சந்தைப்படுத்தப்பட்டது. சீனாவில் இதர பொருட்களை போன்று ஷொப்பிங் பைகளிலும் பியரை வாங்க முடியும். அனேகமான பியர் வகை கிளாஸில் ஊற்ற நுரை மேலேழும். நுரை கீழிறங்கும் அபூர்வ தயாரிப்புகளும் சில இடங்களில் உண்டு. பியர் போத்தல் நிமிர்ந்து நின்றால் நல்ல சகுனமாம். சரிந்திருப்பின் வாழ்வும் சரியுமாம். வெற்று மது கிண்ணங்களை பார்த்து மனதில் நிரம்பும் பயம் cenosillicaphobia ஆகும்.

பியர் போத்தல் தத்துவம் (Beer Bottle Principle) என்று ஆங்கில பிரபல சொலநடை ஒன்று உண்டு. ஆரம்பம் ஆர்ப்பரிக்கும் பின்பு அடங்கிவிடும் என்பது இதன் கருத்து. நன்கு குலுக்கி விட்டுத் திறக்கப்படும் பியர்ப் போத்தல் பொங்கி வழியும். ஓரிரு விநாடிகளில் எல்லாம் வடிந்து அடங்கிவிடும். அது போலத்தான் சிலர். அசத்தலோடு தொடங்கி ஆரவாரம் இன்றி அமைதியாகி விடுவர். ஆவுஸ்திரேலியாவில் உள்ள எடித்கோவன் பல்கலைகழகம் கலை மாமணி பட்டத்தையும் இங்கிலாந்திலுள்ள நாட்டிங்ஹாம் பல்கலைகழகம் முது மாமணி பட்டத்தையும் முறையாக பியர் தயாரித்து குடிப்பவர்களுக்கு...மன்னிக்கவும் படிப்பவர்களுக்கு வழங்குவதில் பிரபலமானவை. உணவின் பின்பு பியர் என்பது தான் அவர்களுக்கு அங்கு ஆரம்ப அரிவரி அரிச்சுவடாக அமையுமோ? யாரறிவர்!

சீனா, அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா, இங்கிலாந்து, பிரேஸில், கனடா, நெதர்லாந்து, ஜப்பான், மெக்ஸிக்கோ போன்ற நாடுகள் வருடமொன்றிற்கு 40 பில்லியன் பைந்துக்கும் அதிகமான பியரைக் குடித்து உலகிற்கு 'சியேர்ஸ்' சொல்கின்றன.

குடியாதவர்களையும் சொக்க வைக்கும் பியர் கிண்ணங்களின் நுரைமகுடம் - குடிப்பவர்களுக்கோ சொர்க்கத்தின் சொர்க்கம்.

ரத்தத்தை அழுதது போல கண்கள் சிவக்க குடிப்பவர்களால் ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி பியர் தினமாக வெறியுடன் பருகப்படுகின்றது. குடித்தவர்கள் வெட்கப்படுதை அனுபவிக்கும் நாளாக அடுத்த நாள் hangover நாள் நெடி சிந்துகிறது! செப்டம்பர் 25, அகராதிக்கும் அப்பாற்பட்ட ஆறேழு சொற்களால் வாய்கொப்புளிக்கும் 'வெறிக்குட்டியர்' தினமாகும். தாயக கிராமங்களுக்கும் இவை பரவும்பொழுது அசிங்கமான வார்த்தைகள் ஒழுங்கைகள் முழுக்க ஒலமிடும்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் 6ஆம் திகதி ஒன்ராறியோ மாகாணத் தேர்தல்: வாக்களிப்பு 29 நாட்கள்

அதிகளவு மக்களை வாக்களிக்கச் செய்யும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக, வாக்களிக்கும் நாட்களை அதிகரிக்கச் செய்யும் திட்டமொன்றை ஒன்ராறியோ தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்யவுள்ளது. இந்தவருடம் அக்டோபர் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தலின்போது இது அறிமுகமாகும்.

தேர்தல் திகதிக்கு முன்னர் மொத்தம் 29 நாட்களுக்கு வெவ்வேறு வழியாக மக்கள் வாக்களிக்க வழிசமைக்கப்படுகின்றது. இவ்வளவு தொகையான நாட்களுக்கு இதற்கு முன்னர் வாக்களிப்பு வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

அத்துடன், தபால் மூலமும் வாக்களிப்பதற்கான விசேட வாக்களிப்பு அட்டையும் இந்தத் தேர்தலில் அறிமுகமாகவுள்ளது.

2007ல் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் 52.8 வீதமான மக்களே வாக்களித்தனர். இதுவே ஆகக்குறைந்த வாக்களிப்பு வீதமாகும். இதற்கு முன்னர் குறைந்தளவிலான வாக்களிப்பு 1923ஆம் ஆண்டில் 54.7 வீதமாகவிருந்தது.

குறைந்து வருகின்ற மக்களின் வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்கவே ஒரு மாதத்துக்கு முன்னரிலிருந்து ஆரம்பமாகும் வாக்களிப்பு வசதி அறிமுகப்படுத்தப்படுகின்றது. அக்டோபர் 6ஆம் திகதிய தேர்தலுக்கான விசேட வாக்களிப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள், 2011 செப்டம்பர் 07ஆம் திகதியிலிருந்து ஒன்ராறியோ தேர்தல் ஆணையகத்துக்கு விண்ணப்பிக்கலாம். தேர்தல் தினத்துக்கு ஆறு நாட்கள் முன்னர் வரை இவை ஏற்றுக்கொள்ளப்படும்.

விசேட வாக்காளர் அட்டைக்கு விண்ணப்பித்துப் பெறுபவர்கள், செப்டம்பர் 8 முதல் அக்டோபர் 5 வரை தமது வாக்குகளை செலுத்தலாம். வழமையான முற்கூட்டிய வாக்களிப்புகள் செப்டம்பர் 21 முதல் செப்டம்பர் 30 வரை இடம்பெறும்.

இவை தொடர்பான சகல விபரங்களையும் www.wemakevotingeasy.ca என்ற முகவரியிலுள்ள இணையத் தளத்தில் காணலாம்.



பொன்னையா விவேகானந்தன்

# தீம்பால் கொல்கலம் 16

எமது முன்னோரது வரலாற்றுப் பதிவில் காதல் உன்னதமான இடம் பெறுகின்றது. காதலே கழக இலக்கியங்களின் கருப்பொருள். இளவயதுப் பருவத்தார் மனங்கலந்து கொள்ளும் காதலை எம் முன்னோர் ஏற்றுக்கொண்டிருப்பினும், ஊர் அலர் எழுந்து காதலர்களை வருத்திய வரலாறுகளும் உண்டு.

கலித்தொகையில் ஒரு காட்சி.

பருவம் களிநடம் புரியும் பருவத்தினர். தாகத்தை மட்டுமே விழிகள் வழியவிடும் உருவத்தினர். நெய்தல் பூ நிறைந்தாடும் கரைகள் தோறும் இவர்கள் காதலே சிந்திக்கிடந்து. காதலின் கால் கழுவிச் சென்ற அலைகள் மௌனம் காத்தன. ஓய்வற்ற ஊராரின் விழிகளை எத்தனை நாட்களுக்குத்தான் கட்டிப்போட முடியும்?

இந்த இளங்காதல், ஊர்வாய்க்கு அவல் ஆனது. மெல்ல மெல்ல மென்றது ஊர். உயிரெல்லாம் காதல் என்றலைந்த காதலன் ஊரின் சொல்லுக்கு அஞ்சத் தொடங்கினான். காலவோட்டத்தில் காதல் சந்திப்பைச் சத்தமின்றி நிறுத்திவிட்டான். மணமானால் ஊர் அலர் அழிந்துவிடும் என்ற நம்பிக்கையில், ஊர்ச்சொல் பற்றி வருந்தாதவளாகத் தன் ஆழக்காதலைத் தொடர்ந்தாள் நங்கை. ஆயினும் அலைக்கரை எங்கும் காதலனைக் காணோம்.

மனம் வருந்தினாள். தோழியர் மூலம் காரணத்தைக் கண்டறிந்தாள். ஊருக்கு அஞ்சி அவன் தன் காதலைத் துறக்க முனைந்தமை அவளுக்கு மேலும் துயரத்தைத் தந்தது. துவண்டு போனாள். துயர் துடைக்க முன்வந்தாள் ஒரு தோழி. உன் காதலை நான் காப்பாற்றுகிறேன் என்றாள். அலையும் வலையுமாய் நீண்டு கிடந்த கரைதோறும் தலைவியின் காதலனைத் தேடினாள். தேடியவள் விழிவலையில், அகப்பட்டான் காதலன். காதலனுக்குள் காதலைத் தேடுகிறாள் தோழி.

மாலைநேரக் கடற்காற்று இன்பமளிக்கிறதோ? வினவுகிறாள் தோழி. ஆம் என்கிறான்.

நலம் மிக்க தலைவனே, ஆற்றுதல் போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை போன்ற பண்புகளை நீ அறிவாயா? நான் அறியேன். அறிய வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. தோழியின் உட்கருத்தைப் புரிந்துகொண்டு எகத்தாளமாகப் பதில் கூறினான்.

'....புள் அல்கும் துறைவ கேள்.
ஆற்றுதல் என்பது, ஒன்று அலர்ந்தவர்கது உதவுதல்
போற்றுதல் என்பது, புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது, பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது, தன்கிளை செருஅமை
அறிவு எனப்டுவது, பேதையர் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது, கூறியது மருஅமை
நிறை எனப்புடுவது மறைபிறர் அறியாமை
முறை எனப்டுவது, கண்ஓடாது உயிர்வெளவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கதை அறிந்தனிர் ஆயின், என்தோழி
நல்நுதல் நலன் உண்டு துறத்தல், கொண்க!
தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்
நின்தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே" நெய்தற்கலி 6

ஆற்றுதல் என்பது, இல்லாதோருக்கு உதவுதல், போற்றுதல் என்பது தம்மைக் கூடியவரை எக்காலத்தும் பிரியாதிருப்பது, பண்பு என்பது, உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதல், அன்பு என்பது உறவினரை நிலை கெடாது காத்தல், அறிவு என்பது, அறிவற்றோர் சொல் பொறுத்தல், செறிவு என்பது சொல் தவறாமை, நிறை என்பது, மறைக்க வேண்டியவற்றைப் பிறர் அறியாது காப்பது, முறை என்பது வேண்டியவர் வேண்டாதவர் என வேறுபாடு காட்டாதிருப்பது, பொறை என்பது காலம் வரும்வரை காத்திருப்பது.

இவையெல்லாம் நீ அறிந்திருந்தால் தலைவியை இன்புற்றுத் துறத்தலை நீ செய்திருக்க மாட்டாய். உன்செய்கை பால் உண்ட பிறகு, பாத்திரத்தைக் கவிழ்த்து விடுதலுக்கு ஒப்பானது. இவற்றை நீ புரிந்து கொண்டால், உடன் சென்று அவள் துயரம் நீக்கு. அவள் இருப்பிடம் நோக்கி உன் தேரைப் பூட்டு.

வெட்கித் தலைகுனிந்தவன் உள்ளத்தில் புதையுண்டிருந்த காதல் மீண்டும் பூத்தது.

தோழியின் வெற்றியை ஆர்ப்பரித்துக் கொண்டாடின அலைகள்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## அகதிக் கதையின் பாணியில் திருமண வாழ்த்துப் பாக்கள்!

கோடை விடுமுறை என்றால் குதூகலம்தான்! புகலிட நாடுகளின் தமிழ் உறவுகள் குடும்பம் குடும்பமாக கனடாவுக்குப் படையெடுத்துள்ளனர்.

அரங்கேற்றங்கள், திருமணங்கள், ருதுசாந்தி வைபவங்கள் மட்டுமன்றி பிறந்த நாள் மற்றும் திருமண நாள் நிகழ்வுகள் வெள்ளி-பொன்-மணி-பவளம் என்ற பெயர்களில் அமர்க்களம்!

கடந்த மாதம் திருமண வைபவம் ஒன்றினை நிகழ்த்திய குருவானவர் சொன்ன கதை சுவாரஸ்யமானது:

"திருமண முடிவில் வாழ்த்துப்பா பாடிக் கையளிக்கப்பட்டது. அதற்கு முன்னர் இதே வாழ்த்துப்பா மூன்றுக்கு மேற்பட்ட திருமணங்களில் வாசிக்கப்பட்டது நினைவுக்கு வந்தது. மணமகன், மணமகள், அவர்கள் பெற்றோர் விபரங்கள் மட்டும் மாற்றப்பட்டிருந்தது.

இதில் வேடிக்கை என்னவென்றால் அனைத்தையும் எழுதிக் கொடுத்தவர் ஒரே 'பிரமுகரே'. இதற்குப் பணமும் பெறப்படுகின்றது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் அகதிக்கதை எழுதிய பாணி இது!

## சாப்பாட்டுப் பார்சலும் மீன் விற்பனையும்

கொழும்பு மாநகர சபை அங்கு விற்பனை செய்யப்படுகின்ற மதிய, இரவு உணவு வகைகளின் விடயத்தில் புதிய விதியொன்றினை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

பத்திரிகைக் கடதாசிகளில் சாப்பாடுகளை பார்சல் பண்ணக்கூடாது. இதற்கெனவுள்ள மெழுகுக் கடதாசி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் உணவுப் பார்சலின் மேலே, அது தயாரிக்கப்பட்ட இடம்-காலம்-நேரம் என்பவை கட்டாயமாகப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய விதிகள் ரொறன்ரோவிலும் கட்டாயமாக்கப்பட வேண்டுமென்று ஓர் அன்பர் எழுதியுள்ளார். அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

எம்மவரின் மீன் கடைகளில் பார்சல் செய்வதற்கும், வணிப நிலையங்களில் வடை, முறுக்கு, றோல்ஸ் என்பவற்றை காட்சிக்கு வைக்கும் கண்ணாடிப் பெட்டிகளுக்கும் இலவச தமிழ்ப் பத்திரிகைகளை பயன்படுத்துகின்றனர் என்பது இவரது குற்றச்சாட்டு!

அச்சடிக்கப்பட்ட மையிலுள்ள இரசாயனம் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் என்பது உண்மையே!

## முள்ளிவாய்க்கால் ஆவிகள் கோபாலபுரத்தில் சஞ்சாரம்!

தமிழக சஞ்சிகைகளை விரித்தால் மு. கருணாநிதி பற்றி பல பக்கங்களில் விடயங்கள் வருவது இப்போது வழக்கமாகி விட்டது. அவரது குடும்பத்தினரின் அல்லாட்டம் பற்றியும், அவர்களது எதிர்காலம் பற்றியும் விலாவாரியாக அலசப்படுகின்றன

தயாநிதியின் அமைச்சர் பதவியும் போய்விட்டது. அவர் எப்போதும் ஒன்பது கம்பிகளுக்குள் போகலாம்! அடுத்தது அழகிரி. மத்தி கைவைக்கத் தவறினால் மாநிலம் அதனைச் செய்யும்.

அவரது தொண்டர்களாகவிருந்த குண்டர்கள் ஒவ்வொருவராக வலைக்குள் சிக்கியுள்ளனர். மு.கவின் சகபாடிகளான முன்னாள் மந்திரிகள் நிலையும் இதுதான்!

அழகிரி-ஸ்டாலின் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துள்ளது. முன்னர் போலத் தாம் விரும்பும் எதனையும் செய்ய முடியாது தலையைத் தடவும் நிலைக்கு மு.க தள்ளப்பட்டுள்ளார்.

கனிமொழி விடயத்தில் ஸ்டாலினைப் பழிவாங்க மூன்றாவது மனைவி ராசாத்தி (அம்மாள்) மு.க பின்னால் நிழலாகத் தொடர்கின்றார்.

'மானாட மயிலாட' ரசித்த முன்னாள் முதலமைச்சரை, முள்ளிவாய்க்கால் ஆவிகள் இப்போது ஆட்டி வருவதாக நெருக்கமானவர்கள் அச்சத்துடன் முணுமுணுக்கின்றனர்.

## இசைக்கலை என்பது பத்திரிகை அடிப்பது ......

கனடாவிலுள்ள இசைக்கலைஞர்களில் ஆனந்த பிரசாத் முக்கியமான ஒருவர். இவரது தொடர் செவ்வியொன்று அண்மையில் ரொறன்ரோவின் தமிழ் வானொலி நிலையமொன்றில் ஒலிபரப்பானது.

தரமான கேள்விகளும் தகைமையான பதில்களுமாக இந்தச் செவ்வி அமைந்திருந்தது.

இன்றைய இசைக்கலை பற்றி கலைஞர் ஆனந்த பிரசாத் தெரிவித்த கருத்து ஆழமானது.

"ஒரு கணினியும், நான்கு தமிழ் எழுத்துருக்களும் (Fonts), கொஞ்சம் 'கிரபிக்' வடிமைப்பும் தெரிந்தால் இங்கு ஒரு பத்திரிகையை அடித்து விடலாம். இப்படித்தான் இசைக்கலையும் ஆகிவிட்டது" என்று ஆனந்த பிரசாத் தமது ஆதங்கத்தை வெளியிட்டார்.

குறிப்பு: *இது மட்டுமா? இங்கு வானொலி நிகழ்ச்சிகளிலிருந்து மேடை விழாக்கள் வரை எல்லாம் இப்படித்தானே ஆகிவிட்டன!*

*அவர்கள் பிழைக்கட்டும், பேசாமல் விடுங்களேன்.*

## மற்றைய எழுத்தாளருக்கும் இடம் கொடுக்கலாமே!

பல நூல்களை வெளியிட்ட பிரபல எழுத்தாளர் ஒருவர் புத்தகக் கடையொன்றுக்குச் சென்ற போது மகிழ்ச்சியால் திளைத்தார்.

அவரது பல நூல்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

"என்னுடைய நூல்களை மட்டும் விற்பனைக்கு வைத்திருக்கிறீர்களே. மற்றையவர்களின் நூல்களையும் வைக்கலாமே!" என்று கடைக்காரரிடம் கேட்டார்.

"மற்றையவர்களின் நூல்கள் அனைத்தும் விற்று முடிந்து விட்டன" என்று அமைதியாகப் பதில் வந்தது.

பிரபல எழுத்தாளருக்கு ஏன் கேட்டோம் என்றாகி விட்டது.

சற்று முன்பிருந்த மகிழ்ச்சி மாறி வெட்கமாகிப் போய்விட்டது.

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்



# தணலையே கவ்வி தவிக்கும் நண்டுகள்!

எந்த உலகைக் கைக்குள் ஆக்கி
 ஈழ விடுதலைப் போர்சாயத்தார்
எந்த உலகின் வலிமை தேடி
 எம்மை இனக்கொலை புரிந்திட்டார்
அந்த உலகே இவரை இந்நாள்
 அழிக்கக் கிளம்பி நிற்பதுபார்!
தந்திரம், தன்னைப் புரிவோர்க் குந்தான்
 தந்திடும் அழிவை! பொய்த்திலதே!

குறுக்கு வழியில் தேட்டம் எல்லாம்
 கொடுக்கும் துயரே நிச்சயமாய்!
மறுத்து நீதி, வன்கொலை தம்மால்
 வரித்த தமது போர்வெற்றி
அறுக்கத் தமது கழுத்தை முனைதல்
 அறிந்தார் காலங் கடந்தேதான்!
அறத்தில் பிழைக்கும் அரசர் தம்மை
 அறமே கொல்லல் வரலாறு!

'பாவம் நாய்கள் கொல்லேல்' என்று
 பரிந்து பேசிக் கொள்ளரசோர்
ராவில் நாய்கள் சுட்டுச் சுடலை
 எறிந்தார் தாய்பார் வதிசிதைமேல்!
ஏவி நாயின் தலையை வெட்டி
 இடுவித்தார் தமிழ் வீட்டுள்ளே!
'யாவர் அறிவார்?' என்னும் துணிவோ?
 யாரே அறியார் செய்தவரை!

வன்னிப் போரில் பல்லா யிரம்தமிழ்
 மாணவர் தம்மைக் கொன்றவரே,
இன்னும் பல்லா யிரம்சேய் பெற்றோர்
 எல்லா ரையுமே கொன்றவரே,
என்னே கருணை, 'பரீட்சை எழுத
 ஏகும் போது விநாயகரை
உன்னத் தொழுது சென்றால் வெற்றி
 உறுமென் றார்பார்! என்னஅருள்!

ஒன்றரை லட்சம் தமிழர் உயிர்கள்
 ஓரிரு நாளில் கொன்றவரே,
இன்றும்எம் மினத்தைக்கொலைகள், கொள்ளை
 இரைகொண் டழிக்கச் செய்பவரே,
வென்றிடத் தேர்தல் அடாவடி தம்மால்
 வெங்கொடு மைபல தொடர்வோரே
தின்றுள்ள நஞ்சு கொஞ்சமோ? விரைவில்
 செல்வார் கூண்டோடு கைலாயம்!

"மின்கதி ரையில்நான் வெந்திட்டாலும்
 இராணுவ வீரரை ஒருபோதும்
அந்நியர் நீதிவிசாரணை செய்ய
 அனுமதிக் கேன்!"என்று சொன்னவரே
தன்சொல் காக்கத் தன்தலை போவார்!
 சத்திய மாகநடக்கும்! அதை
இந்நிலம் ஆளும் வல்லர செல்லாம்
 இனியும் தடுத்திட முடியாது!

ஒன்றோ, இரண்டோ ஊது குழல்கள்
 உத்தமக் 'கெமுனு' கொண்டுள்ளார்?
நன்றி கெட்ட நக்கி கருணா
 'சூப்பி' நஞ்சர்கள், வீமல்வீர

வன்ச என்னும் ஒருகோ மாளி,
 மதவெறி, இனவெறி மந்திரிமார்
சன்னி மொட்டை - சரித்திரம் மாற்றித்
 தம்பட்டம் அடிமேத் தானந்தா!

"வன்னி இறுதிப் போரில் ஒற்றை
 மனிதரை யேனுங் கொல்லவில்லை!"
என்றே அடித்துச் சொன்ன பொய்யை
 என்றும் நாட்டும் பதைப்பினிலே,
பன்னூ றாகப் பச்சைப் பொய்கள்
 பகர்ந்தே சாயம் வெளுக்கின்றார்!
பின்னிப் பின்னிப் புதுப்புதுக்கதைகள்
 பிதற்றி, மாட்டுப் படுகின்றார்!

தெருச்சண் டியர்போல் ஐ.நா.நிபுணர்
 தீட்டிய அறிக்கை தனையிகழ்ந்தார்!
தரக்குறை வாக நிபுணர்கள் தம்மை,
 பான்கீ மூனைச் சாடிட்டார்!
இருட்டில்பின் கதவால் சென்று பல்லோரை
 இரந்து, காக்க வேண்டுகிறார்!
புரட்டிப் புரட்டிப் பேசித் தங்கள்
 பொய்ம்மை உலகம் தெளியவைத்தார்!

புண்ணே முதுகில் இல்லையென்றால்
 புகவுங் காடேன் அஞ்சுகிறார்?
உண்மையாக இறுதிப் போரில்
 ஒன்றரை லட்சம்பேர் கொன்றிலரேல்,
கண்ணைக் கட்டி, சரணடை வேங்கைகள்
 கணக்கற் றோரைக் கொன்றிலரேல்,
"பண்ணு விசாரணை! பயமில்லை" என்று
 பாய்ந்துமுன் நிற்க அஞ்சுவதேன்!

குற்றமுள்ள நெஞ்சந் தானே
 குறுகு றுத்துக் குலைகிறது!
சுற்றி யுள்ள நாடுகள் தங்கள்
 சுயநலங் கருதி உதவிதர
முற்று முழுதாய்த் தீவைத் தனது
 முதுசொம் ஆக்கிடும் வெறியாலே,
சற்றும் ஈன இரக்கம் இன்றிச்
 சந்நதம் ஆடிக் கொலைசெய்தார்!

தற்செய லாக நடந்த தல்ல,
 தமிழினப் படுகொலை வன்னியிலே!
தற்பொழு துந்தான் நடத்துகிறார் கொலை
 சந்தடி யின்றித் தமிழரினை!
முற்பழி, முள்ளி வாய்க்கால் கடந்தும்
 முனைப்போ டியற்றும் பழிகளினால்
அற்பர்கள் பூண்டோடழியுங் காலம்
 அண்மையிலே! இறை வாழ்த்திடுவோம்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# உயிரும் உறுதியும்!!!

அன்றொரு நாள் தமிழ்ச் சமுதாயத்தில் புதியதொரு நாகரிகம் புயலாக எழுந்தது! முயற்சி மறைந்து புகழ்ச்சி மலர்ந்தது! அன்பு மறைந்து ஆதிக்கம் வேர்விட்டது! கற்பு நலிந்து தப்பு நிகழ்ந்தது! அறம் சரிந்தது! அவலங்கள் முளைத்தன! தொண்டனாக விளங்கிய மன்னன் அதிபதியாக மாறத் தொடங்கினான்!

இந்தக் காலகட்டத்திலே தான் தனி மனிதனாக நின்று வள்ளுவன் குறள் முழக்கம் செய்தான். ஒரு நாட்டை, ஒரு அரசனை, ஒரு மந்திரியை, ஒரு இல்லறத்தானை, அவன் மனைவியை, ஒரு தொழிலாளியை, ஒரு துறவியை, ஒரு காதலனை, அவன் காதலியை, ஒரு போர்வீரனை, ஒரு கொடியவனை, ஒரு குடிகாரனை, ஒரு படிக்காதவனை என்று சமுதாயத்தில் ஒவ்வொருவரையும் பொறுக்கி எடுத்து யாரையும் தப்பவிடாது குறை கண்டு கண்டித்தான்! நல்லது கண்டு போற்றினான்!

அந்த வள்ளுவன் ஒரு முறை காட்டு வழியாகப் பயணப்பட நேர்ந்தது. தெரு விளக்கும் வாகன வசதியும் அற்ற காலத்தில் குன்றும் குழியும் குறுகி வழி நடந்தான் அவன் தன் நண்பருடன்! ஓரிடத்தில் பிரயாணிகளை எல்லாம் கள்வர்கள் சூழ்ந்து கொண்டார்கள்! வள்ளுவனும் அகப்பட்டுக் கொண்டான்!

கூரிய வேல்களை வைத்திருந்த அந்தக் கள்வர்கள் தங்கள் ஆயுதங்களைக் காட்டி பயணிகளிடம் இருந்த பொருட்களையும் பணத்தையும் பறித்துக் கொண்டு வழியனுப்பினார்கள்! இருந்ததைக் கொடுத்துவிட்டு வள்ளுவனும் நடந்தான்!

காடு முடிந்து நாடு வந்தது. மக்கள் கள்வர் பயம் தெளிந்து நடந்தார்கள்! அரசிடம் நடந்ததை முறையிடுவோம் என்றார்கள்! அப்போது முழவு என்னும் மேளம் அதிர்ந்தது! அதைத் தொடர்ந்து அரசாங்க வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது மக்களுக்கு!

நாட்டிலே மழை இன்மையால் வரட்சி தலைவிரித்து ஆடுகிறது! அதனால் குடிமக்கள் அனைவரும் தங்களால் முடிந்த பொருள் உதவியை அரசுக்கு வழங்கி உதவ வேண்டும் என்று மன்னர் கேட்டுக் கொள்கிறார் என்றது அந்த அறிவிப்பு!

நண்பர் கேட்டார். வள்ளுவரே! மக்களிடம் பொருள் வேண்டி எவ்வளவு பணிந்து போகிறது இந்த அரசு. மக்களை வாழ வைக்க மன்றாட்டமாகக் கேட்கும் அரசுக்கு நாம் எம்மால் இயன்றதை உதவத்தானே வேண்டும் இல்லையா?

வள்ளுவர் நண்பரைப் பார்த்துச் சிரித்தார்! இந்த அரசு எவ்வளவு இதமாக பதமாக மன்றாட்டமாக உதவி கேட்டாலும் காட்டிலே எங்களிடம் பொருள் பறித்த கள்வருக்கும் இந்த அரசுக்கும் இடையிலே வேறுபாடு ஒன்றும் இல்லை!

அவன் காட்டிலே ஆயுதத்தை வைத்துக்கொண்டு பொருளைக் கேட்டான். இவன் நாட்டிலே ஆட்சியை வைத்துக் கொண்டு பொருள் கேட்கிறான்! ஆட்சி அதிகாரமும் மக்களை அச்சுறுத்தும் ஒரு ஆயுதம் தான்! இந்த இரண்டு பேருமே கள்வர் தான்! இரண்டு பேருக்கும் மக்கள் பயந்து தான் பணம் கொடுக்கிறார்கள்! கொடுக்காவிட்டால் ஏற்படும் விளைவு அவர்களுக்குத் தெரியும்! என்றார் வள்ளுவர்

வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு

கையிலே வேல் வைத்துக் கொண்டு நிற்கும் கள்வன் வழிப் போக்கரிடம் வைத்திருப்பதைப் போடு என்று கேட்பது போலத்தான் அரசு அதிகாரத்தை வைத்திருக்கும் அரசனும் குடிமக்களை பொருள் கேட்டு நிற்பது ஆகும்!

வள்ளுவள் சொன்ன இந்தச் செய்தியை சிந்தித்துப் பாருங்கள்! கொடுங்கோன்மை என்ற அதிகாரத்திலே இரண்டாவது பாட்டாக இந்தச் சம்பவத்தை வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இன்று நேற்றல்ல இரண்டாயிரம் வருடங்கள் போய்விட்டன! வள்ளுவனுடைய சிந்தனைக்கு இன்றும் அர்த்தம் உண்டு!●

## கூகுளின் புதிய வசதி

மிக பிரபலமான கூகுள் நிறுவனம் குறுகிய கால இடைவெளியில் பல புதிய சேவைகளை அறிமுகம் செய்துள்ளது.

நாளாந்தம் பல மாற்றங்களோடு பல சேவைகளை அள்ளி விடும் கூகுள் நிறுவனத்தின் படைப்புக்களில் இருந்து அண்மையில் வெளிவந்த வசதிகளுள் ஒன்று தான் Google Voice Search.

கையடக்க தொலைபேசிகளில் பயன்பட்ட இந்த தேடல் முறை இப்போது கூகுள் குரோமில் நிறுவப்பட்டுள்ளது. நீங்கள் தேடும் வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் நீங்கள் தேடும் விடயங்களை தேடி தருகிறது. தற்போது இந்த வசதி கூகிள் குரோமில் மட்டுமே உள்ளது.

உங்கள் மைக்ரோ போனை தயார் செய்து கொண்டு மைக் பட்டன் கிளிக் செய்தால் SPEAK NOW என தோன்றும் போது நீங்கள் தேடும் சொல்லின் வார்த்தையை உச்சரிப்பதன் மூலம் உங்களுக்கான தேடல் ஆரம்பமாகும்.

## சந்தோஷமான முதுமை வாழ்க்கை

பிள்ளைகள் வளர்ந்து தம் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு, வீட்டை விட்டு போன பின், பெற்றோர் மட்டும் தனியே வசிக்கும் போது தனிமையிலும், மன அழுத்தத்திலும் வசிப்பது குறைந்துள்ளதாக லண்டன் பேர்க்லே பல்கலைக்கழக மனநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். செய்வதற்கு ஒன்றுமில்லாமல் கையைப் பிசைந்து கொண்டு பிள்ளைகள் எப்போது தொலைபேசியில் அழைப்பார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிராமல், தமது துணையின் அண்மையை அனுபவிப்பதாக இவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

மணமாகி 18 வருடங்களுக்கு மேற்பட்ட பெண்களை வைத்து ஆராய்ந்த போது, பெண்களின் திருமண வாழ்க்கையில் வயதாக ஆக அவர்களின் வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிப்பதாக கூறப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் அவர்கள் பிள்ளைகளை விரும்பவில்லை என்பதல்ல. பிள்ளைகள் போனபின், கணவருடன் நல்ல விதத்தில் பொழுதுகளைக் கழிப்பதில் அவர்கள் சந்தோஷமடைகின்றனர் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயின்ரஸ் துரைசிங்கம்



# திருந்துவரா நம்மவர்?

## ஐரோப்பியர் படையெடுப்பு

தற்போதெல்லாம், ஐரோப்பிய நாடுகளிலிருந்து கனடாவிற்கு வருகை தரும் நம்மவர்கள் தொகை அதிகரித்தே வருகின்றது.

குடும்ப உறவுகளிடையே நிலவும் அன்பையும் பாசத்தையும் நட்பையும் நமது தமிழ் மக்கள் மிக அதிகமாக மதித்து நடப்பதும், அவற்றைத் தொடர்ந்தும் வளமாகப் பேணும் நோக்குடன் எத்தகைய செலவையும் பொருட்படுத்தாமல் அவ்வப்போது பயணங்களை மேற்கொண்டு, உறவுகளைச் சந்தித்து மகிழ்வதும் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளத்தக்க விடயம்.

இப்படி ஐரோப்பாவிலிருந்து கனடாவிற்கு வருகை தரும் நம் உறவுகள், தற்போது புதிதாக தங்கள் வழக்கத்தில் எடுத்திருக்கும் ஒரு விடயம் சற்றே நெருடலாக இருக்கிறது. அதைப்பற்றி தற்போது பார்க்கலாம்.

விடயம் இதுதான். ஐரோப்பாவிலிருந்து கனடாவிற்குப் படையெடுக்கும் குடும்பத்தினர், தங்களது பிள்ளைகளது பூப்புனித நீராட்டு விழாவை கனடாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் நிகழ்வுகள் சற்றே அதிகரித்த அளவில் காணப்படுகிறது.

கனடாவிலுள்ள தமிழ் மக்கள் அதிகம் பூப்புனித நீராட்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள் தானே. ஐரோப்பாவிலிருந்து வரும் தமிழர்கள் செய்தால் என்ன என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

கேள்வி நியாயமானது தான். கனடியத் தமிழர்கள் பெரும் பொருட்செலவில் நடாத்திவரும் பூப்புனித நீராட்டு விழாவை, ஏனைய நாட்டுத் தமிழர்கள் தவிர்க்க வேண்டும் என்று கேட்பதல்ல எமது நோக்கம்.

ஆனால், கனடியத் தமிழர்கள் பூப்புனித நீராட்டு விழாவை இப்படிக் கொண்டாடுகிறார்களே என்று குறைப்பட்டுக் கொள்வதுடன், இதை மிகுந்த செலவில் நடத்தி, 'விலாசம்' காட்ட டி.வி.டி. அனுப்பும்போது, அதைப்பார்த்து அதிகம் விமர்சனம் செய்து குறை கூறுவது ஐரோப்பிய வாழ் தமிழ் உறவுகளே என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம் தான்.

அது தவறுமல்ல. மண்டபம் மற்றும் உணவு வகையறாக்களுக்கு மிக அதிகம் செலவழித்து, ஆடை அலங்காரம் நகை நட்டு என்றும், 'லிமோசின்' கார், புகை, மத்தாப்பூ, ஊஞ்சல், பல்லக்கு என, தடல்புடலாய் மேலதிக செலவுகள் வைத்து, காரில் 'பார்' வைத்து, எக்கச்சக்கமாய் செலவு செய்து இந்தப் பூப்புனித நீராட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. இதற்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் ஏகமாய் தாமதித்து வருவதால், படபடவென அனைத்தையும் நடத்தி, ஆராத்தி எடுத்த கையுடன் சாப்பாட்டையும் கொடுத்து, படம் எடுத்தவரும், படம் எடுக்கும்வரை பொறுக்க நேரமின்றி 'என்வலப்' கொடுத்தவரும், 'ஏச்சு' வாங்க மனமின்றி மெல்லமாய் நழுவியவரும், வாகன 'பார்' நடத்தியதால் மண்டபத்தில் நடந்தது என்னவென்றே தெரியாமல் விழிப்பவருமாய், 'வித்தியாசமான' கனடிய தமிழரின் பூப்புனித நீராட்டு விழா ஜாலங்கள், சுவாரஸ்யமும் விநோதமும் நிறைந்தவை. இதை ஐரோப்பிய உறவுகள் விமர்சிப்பதில் தவறிருப்பதாய்த் தெரியவில்லை.

அழைக்கப்பட்ட விருந்தினர்களில் அரைவாசிப்பேர் மண்டபத்திற்கு வந்து விடுவார்கள். ஆனால், அழைத்த விழா நாயகியும் அவரது குடும்பத்தினரும், அதன் பின்னர் தான் மண்டபத்திற்கு வந்து, ஒப்புக்கு 'வாங்க வாங்க' என்று ஒரு சில மேசைகளிலுள்ளோரை அவசரமாய் வரவேற்க, அதற்கிடையில் 'கமரா'க் காரர்கள், அந்தப் பிள்ளையை அகப்பட்ட சுவர்களையெல்லாம் தாங்கிப் பிடிக்க வைத்து 'கிளிக்' செய்ய, அந்நியமாய் ஆரம்பிக்கிறது மஞ்சள் நீராட்டுப் பயணம். பூத்தட்டம், குத்துவிளக்கு, ஆராத்தி, ஆண்டாள் விளக்கு என அனைத்தையும் தூக்கி வருவதற்காய் அத்தனை விருந்தினரும் மண்டபத்திற்கு வெளியே காத்திருக்க, ஒருசில மேசைகளில் ஆண்கள் தமது கைக் குழந்தைகளை வைத்திருக்க, வேகவேகமாய் ஆரம்பிக்கிறது விழா. 10 மணிக்கு ஆரம்பிப்பதாய்ச் சொன்னாலும், எப்படியும் மதியம் 12 மணிக்கு முன்னர் ஆரம்பிக்கும் பூப்புனித நீராட்டு விழாக்கள் மிகமிகக் குறைவு எனலாம்.

எதற்காகச் செய்கிறோம் என்பதே தெரியாமல் சில சடங்குகள் உள்ளடங்கலாக, வீடியோவுக்காகவே பல சம்பிரதாயங்கள். பின்னர், உணவுக்கு ஒரு 'லைன்', வாழ்த்த ஒரு 'லைன்', கேக் வெட்டிய பின் படமெடுக்க ஒரு 'லைன்', பழவகை எடுக்க ஒரு 'லைன்' என்று, பூப்புனித நீராட்டு விழா நகர்ந்து செல்லும். சிலவேளை, அப்பத்திற்கு ஒரு 'லைன்', அறுகரிசி போட ஒரு 'லைன்', உணவுக்கு நான்கு 'லைன்'கள் என்று நகரும் ஏனைய விழாக்களும் உள்ளன.

இப்படியான விநோதமான கனடியத் தமிழர் விழாக்களை, ஏனையவர்கள் குறை சொல்வதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும், அப்படி குறை கூறிக் கொண்டிருக்கும் பலரும், கனடிய வருகையின் போது, அதே தவறுக்குத் துணை போய் விடுவதுதான் கொஞ்சம் இடிக்கிறது. குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து கனடாவுக்கு விடுமுறைக்கு வருகை தரும் இவர்கள், அதுவரை விமர்சனம் செய்த பூப்புனித நீராட்டு விழாவை, தங்கள் மகளுக்கும் செய்து பார்க்க ஆசைப்படுகின்றனர். இருப்பினும், கனடியத் தமிழர்கள் எப்போதும் நேரத்துக்கு எதையும் ஆரம்பிக்கவோ செய்யவோ தவறுவதைப் பெரிதாக்கி, அதை தாங்கள் நிவர்த்தி செய்து காட்டுகிறோம் என்று சவால் விட்டு, அதன் மூலம் தாங்கள் பூப்புனித நீராட்டுவிழா நடத்தியதை சரிபோன்று காட்டுவதும் கூட, விநோதமான புதிய மாற்றமே.

நேரம் தவறுகின்ற அல்லது தாமதிக்கின்ற விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் மிகவும் கடுமையான நிலைப்பாட்டை வைத்துள்ளன. ஒரு நிமிடம் தாமதித்தாலும், அங்கே அனைத்துமே திவாலாகி விடும். காலை 7:43 க்கு புகையிரதம் வருமென்றால், 7:44 ற்கு, நீங்கள் அதைத் தவற விட்டவராக இருப்பீர்கள். வேலை ஆரம்ப நேரத்திலும் அப்படித்தான். 10 நிமிடம் தாமதமாக வேலைக்குப் போனால், கனடாவைப் பொறுத்தவரை, நேர அட்டையைப் பரிசோதித்து, 15 நிமிடம் சம்பளத்தைக் கழிப்பார்களே தவிர, வேறு பெரிய பிரச்சனைகள் எழுவது குறைவு. ஆனால் ஐரோப்பாவில் 10 நிமிடம் வேலைக்குத் தாமதமாகச் சென்றால், அப்படியே வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள், (32ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ரி. சிங்கம்

# ஒவ்வாமை - அலர்ஜி
## கச்சான் (வேர்க்கடலை) ஆபத்தான உயிர்க்கொல்லி

'அலர்ஜி, அலர்ஜி' என்று பல உணவுப் பொருட்களைக் கையால்கூட தொடுவதற்குப் பலரும் அஞ்சுவதை நாளாந்தம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் உண்ணும் உணவே எமக்கு அலர்ஜியாகி (ஒவ்வாமை) விடுவதால் பல மரணங்களும் கனடாவில் நிகழ்ந்துள்ளன. ஒவ்வாமை என்பது ஒரு நோய் மட்டுமன்றி, சமூக வாழ்க்கையில் ஒருவரது வகிபாகத்தையும் மாற்றி விடுகின்றது.

கச்சான் கடலை (வேர்க்கடலை), பாதாம், பிஸ்தா, பால்புரதம், முட்டை, சோயாப் புரதம், நண்டு, இறால், சில மீன் வகைகள் என்று ஒவ்வாமையுள்ள உணவுப் பொருட்களின் பட்டியல் அண்மைய காலத்தில் அவதானித்திருப்போம். இவற்றுள் கச்சான் கடலையே மிகவும் ஆபத்தான உணவுப் பொருள் என்றும், உயிர்க்கொல்லிகளில் முக்கிய இடத்தை வகிப்பதாவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிலரது ஒவ்வாமைகள் அவர்களின் சிறுவயதிலேயே கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆனால், பலருக்கு பிற்காலத்திலேயே தெரிய வருகின்றது. உடலில் அரிப்பு, தோலில் தடிப்பு, மூச்சுத் திணறல், கண்கள் மற்றும் உதடுகள் வீங்குதல், சிவந்து நீர் சொரிதல் போன்றவை இதற்கான அறிகுறிகளில் சில. இது உடனடியாகக் கவனிக்காது விடப்படும் போது உயிருக்கு அபாயம் ஏற்படுகின்றது. இந்த அபாய நிலைமையை 'anaphylaxis' என்பர்.



பால்புரதம், சோயாப்புரதம், முட்டை போன்றவற்றால் நிகழும் ஒவ்வாமை காலப்போக்கில் குணமடையும் என்று வைத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், கச்சான் கடலையால் ஏற்படும் ஒவ்வாமையால் பாதிக்கப்படுபவர்களில் சுமார் ஐந்து வீதமானவர்களே குணமடைவதாக மருத்துவ அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

கச்சான் கடலையால் ஏற்படும் ஒவ்வாமையை நீக்குவது தொடர்பான பல ஆராய்ச்சிகள் உலகம் பூராவும் நடைபெற்று வருகின்றது. தாராள மனம் படைத்த வள்ளல்களும் பல தொண்டர் நிறுவனங்களும் இதற்கான நிதியை வாரி வழங்கி வருகின்றது.

இந்நோயை அடியோடு அழிப்பதற்குக் கனடிய அரசும் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

கச்சான் இலங்கை இந்தியா உட்பட்ட ஆசிய நாடுகளில் முக்கியமான ஒரு உணவுப் பொருளாக இருந்து வருவதால், இதனை ஒவ்வாமையாக ஏற்பதற்கு கனடா போன்ற மேற்கு நாடுகளில் வசிக்கும் ஆசிய நாட்டவர்களால் முடியாதுள்ளது. நாம் எமது தாய்நாடுகளில் வாழ்ந்த நாட்களில் கச்சான் கடலையால் எவராவது மரணித்ததாக அறியாதிருந்ததே இதற்குக் காரணம்.

இங்கு பல இனிப்புப் பதார்த்தங்களில் கச்சான் கடலை சேர்க்கப்படுகின்றது. கச்சான் எண்ணெய் பல உணவு தயாரிப்புக்குப் பயன்படுகின்றது. கச்சான் பட்டரும் பாவனையிலுள்ளது. சொக்கலேட்டுகளிலும் இது சேர்க்கப்படுகின்றது. இவைகளால் ஒவ்வாமை அதிகரிக்கலாமென்ற அச்சமும் காணப்படுகின்றது.

ஒவ்வாமையுள்ளவர்கள் தொடர்ந்து கச்சான் கடலையை உட்கொள்வதால் மேலதிக தாக்கத்துக்கு ஆளாகின்றனர்.

இதனால் பாதிக்கப்படுபவர்கள் முன்னெச்சரிக்கையாக எபிபென் (Epipen) ஊசி மருந்தினைத் தம்முடன் வைத்திருக்க வேண்டுமென்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர். கச்சான் கடலையின் ஒவ்வாமையால் பாதிக்கப்படும் ஒருவர், தமக்குத் தாமே இந்த ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ள முடியும்.

சுமார் 20 முதல் 30 நிமிடங்களுக்கு மட்டுமே இந்த ஊசி மருந்தினால் ஒருவரைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். அதற்கிடையில் அருகாமையிலுள்ள வைத்தியசாலையொன்றில் அவரைக் கொண்டு சென்று அவசர சிகிச்சை வழங்க வேண்டும். பெருந்தொகையானவர்கள் இந்த ஊசி மருந்தினைப் பயன்படுத்தி உயிராபத்திலிருந்து மீண்டுள்ளனர்.

கச்சான் கடலை ஒவ்வாமையுள்ளவர்கள் தங்களின் பாடசாலைகள், குழந்தைகள் காப்பகங்கள், வேலைத் தலங்களில் முற்கூட்டியே அதனைத் தெரிவிக்க வேண்டியது கட்டாயம். உணவகங்களில் உணவைப் பெறும்போதும், விருந்துகளுக்குச் செல்லும் போதும் தமது ஒவ்வாமையைத் தெரிவிக்க வேண்டும்.

இது தவிர, மருத்துவ எச்சரிக்கைக் காப்பை (Med Aletrt Brace Let) கையில் அணிந்திருப்பது பாதுகாப்பானது. தமது நோயைத் தெரிவிக்க முடியாத குழந்தைகளுக்கும், முதியோருக்கும் இந்தக் காப்பு அவசியமானது. உடனடி மருத்துவ வசதிக்கு இது உதவுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் எமது குடும்ப வைத்தியர் ஊடாக எமக்குள்ள ஒவ்வாமைகளைக் கண்டறிய வருடாந்தப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியா என்.டி.பி தலைவர் அன்ட்றியாவுடன் ஸ்காபரோ றூஜ்றிவர் மக்கள் கலந்துரையாடல்



ஒன்ராறியோ மாகாண என்.டி.பி தலைவர் அன்றியா ஹொவாத்துடன் ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதி மக்கள் நடத்திய கலந்துரையாடலொன்று கடந்த மாதம் 20ஆம் திகதி ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இத்தொகுதியின் என்.டி.பி அபேட்சகர் நீதன் சண் இதனை ஏற்பாடு செய்திருந்தார். வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, கல்வி வசதி உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. ஒன்றாறியோ மாகாண சபையின் ஈஸ்ற்யோர்க் தொகுதி உறுப்பினர் மைக்கல் புறா, றூஜ்றிவர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் ஆகியோரும் இதில் பங்குபற்றியிருந்தனர்.








## சுவிஸ் லவுசான் மாநகரசபைக்கு நமசிவாயம் உறுப்பினராக தெரிவு



சுவிஸின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான லவுசான் மாநகரசபைக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் திரு. தம்பிப்பிள்ளை நமசிவாயம் மீண்டும் தெரிவாகியுள்ளார். தமிழீழத்தில் அச்சுவேலியைச் சேர்ந்தவரான திரு. நமசிவாயம் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சுவிஸில் வாழ்ந்து வருகிறார். தமிழீழ மக்களின் விடுதலை தொடர்பான பல்வேறு அமைப்புகளில் நீண்டகாலமாக இணைந்து பணியாற்றி வரும் இவர், லவுசான் தேர்தலில் தெரிவான நூறு பேரில் வாக்கு அடிப்படையில் 18வது இடத்தைப் பெற்றது குறிப்படத்தக்கது. இலங்கையில் அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்தாளராகக் (Pharmacist) கடமையாற்றிய திரு. நமசிவாயம், 1970களில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'குத்துவிளக்கு' திரைப்படத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்தது குறிப்பிடத்தக்கது.

## எழுத்தாளர் குரு அரவிந்தனுக்கு 'புனைகதை மன்னன்' பட்டமளிப்பு



பீல் பிரதேசத்தில் அமைந்துள்ள 'சொப்கா' (SCREEN of Peel Community Association) அமைப்பு இவ்வருட கனடிய தின விழாவை மிசிசாகாவில் கலை நிகழ்ச்சிகளுடன் கூடியதாக நடத்தியது. அமைப்பின் தலைவர் திரு. அந்தனி ஜேசுதாசன் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். டாக்டர் விக்டர் பிகராடோ பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினர். கலைமகள் சஞ்சிகை நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்ற கனடிய எழுத்தாளர் குரு அரவிந்தன் விழாவில் 'புனைகதை வித்தகன்' என்ற பட்டம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டார். ராதிகா சிற்சபைஈசன் இதற்கான பட்டயத்தை குரு அரவிந்தனுக்கு வழங்கி, அவரது திறமையை மெச்சி உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமன்ற பொன்விழா ஐஸ்வரியா அரங்கேற்றம்





இலங்கையில் உருவாக்கப்பட்ட கலைமன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு பொன்விழாவும், கனடா கலைமன்ற நிறுவனரும் அதிபருமான நிறைஞ்சனா சந்துரு அவர்களின் மாணவியும் புதல்வியுமான ஐஸ்வரியா சந்துருவின் பரதநாட்டிய அரங்கேற்றமும் இணைந்த வரலாற்று வைபவம் கடந்த மாதம் 3ஆம் திகதி மார்க்கம் கலையரங்கத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இலங்கை கலைமன்ற அதிபரும், நிறைஞ்சனா சந்துருவின் குருவுமான திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம் இவ்வைபவத்தின் பிரதம விருந்தினராகப் பங்கேற்று ஐஸ்வரியாவின் அரங்கேற்றத்தை மகிமைப்படுத்தியிருந்தார். ஐஸ்வரியாவுக்கான பட்டமளிப்புச் பட்டயத்தையும் இவரே கையளித்தது நிகழ்வை மேலும் பெருமைப்படுத்தியது. கலைமன்ற பொன்விழாவை



நினைவுகூரும் வகையில் திரிபுரசுந்தரி யோகானந்தம் அவர்களின் உருவம் பொறிக்கப்பட்ட கனடிய தபால் முத்திரை வெளியிடப்பட்டது. நடனத்துறையின் மூன்று பரம்பரையினரை ஒரே மேடையில் ஒருங்குசேர இந்த நிகழ்வு வாய்ப்பளித்திருந்து. தரமான அணிசேர் கலைஞர்கள், தகைமை வாய்ந்த ரசிகர் கூட்டம், கலைஞர் சுதர்ஷன் துரையப்பாவின் கொஞ்சும் தமிழும் ஆளுமையான ஆங்கிலமும் கலந்த நிகழ்ச்சித் தொகுப்பு ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து, ஐஸ்வரியாவின் அரங்கேற்றத்தை அதியற்புத வைபவமாக்கி நிறைவாக்கியது. தமது குருவின் ஆசீர்வாதப் பிரசன்னத்துடன், மாணவியாகவும் மகளாகவும் அமைந்த ஐஸ்வரியாவின் அரங்கேற்றத்தை நிகழ்த்திய நிறைஞ்சனா சந்துரு, தனித்துவமான ஒரு நடன வித்தகர் என்பதை நிருபித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பேராய்வும் பெருவாழ்வும்

**கலாநிதி அமுது யோசவ் சந்திரகாந்தன்**
*இறையியல் பேராசிரியர், ரொறன்ரோ பல்கலைக் கழகம்*

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் மரணம் இட்டுநிரப்ப முடியாத பெரிய இடைவெளியைத் தமிழ்ப் புலமையுலகில் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இளமானிப் பட்டப்படிப்பினை முடித்து பர்மிங்காம் பல்கலைக் கழகத்தில், முதுமானி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்று, இலங்கைப் பாராளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக சில ஆண்டுகள் கடமையாற்றியபின் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகத் தமது ஆசிரியப் பணியை அவர் ஆரம்பித்தார். 1979ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைத்தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் ஒப்பற்ற பேரறிஞராகப் பாராட்டப் பெற்ற இவரை 1981ம் ஆண்டில் நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையில் எனது ஆசிரியப்பணியை ஆரம்பித்த காலமுதல் தொடர்ந்து முப்பது வருடங்களுக்கு மேலாக, அன்பினிற்கினிய அறிஞராக, பாசமிகு ஆசிரியராக, புலமையாழம் மிக்க ஆய்வாளராக, தமிழ் இலக்கிய சமூகவியற் தேடலில் அதீத ஈடுபாடு கொண்ட சான்றோனாக, தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியினை மானிட, சமய, சமூக நெறிமுறைகளினூடு துல்லியமாக விமரிசனம் செய்யும் வித்தகராக அறிகின்ற, உரையாடுகின்ற, பழகுகின்ற வாய்ப்பு நிறையவே கிடைத்தது எனலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அதன் தொடக்க காலத்திலிருந்தே அணிசெய்த தமிழ்ப் பேராசிரியர்களுள் இவரது சமகாலத்தவரையும் மூத்த சகபாடிகளையும் விஞ்சிய அளவிற்கு அப்பல்கலைக் கழகத்தின் மேன்மையான புலமைத்தள வளர்ச்சிக்கு பொலிவும் வலிவுமூட்டினார். தமிழ்த்துறையிலும், அரங்கியல், நுண்கலை, போன்ற துறைகளிலும் பேராசிரியர் பாரிய, செழுமையான செல்வாக்குச் செலுத்தியுள்ளார். இவரது பல்கலைப் பணியினதும் பலதுறைச் சங்கம ஆய்வு நெறிகளினதும், உன்னதமும் உயர்வும், யாழ்ப்பாண அறிவுலகிற்கும் அப்பால், எமது பல்கலைக் கழகம் அறியப்படவும், பாராட்டப்படவும் வழிசமைத்தன. தமிழகத்திலும் அனைத்திந்திய அளவிலும் இன்னும் உலகின் ஒருசில பல்கலைக்கழகங்களிலும் பேராசிரியரின் எழுத்தாக்கங்களும், பேருரைகளும், நேர்காணல் பதிகைகளும், சிந்தனைக் கருத்து வளங்களும் ஆய்வுப் பொருளாக்கப்பட்டமை இதனை மேலும் உறுதிப்படுத்துவதாகும்.



பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் 1996ஆம் ஆண்டு ரொறன்ரோவுக்கு வருகை தந்திருந்தவேளை 'தமிழர் தகவல்' ஏற்பாடு செய்திருந்த வைபவமொன்றில் உரையாற்றுகையில் எடுக்கப்பட்ட ஒளிப்படம்.

பேராசிரியரின் அகன்று விரிந்த ஆய்வுத்தளமும், புலமைக்களமுமே இதற்கு ஆதாரசுருதியாகவமைந்தன. அரசியல், அறிவியல், மெய்யியல், சைவ சமயவியல், இறையியல், சமூகவியல், மானிடவியல், பண்பாட்டியல் போன்ற பல அறிவுத்துறைகளையும் உள்ளடக்கி, தமது பற்றுக்கோடாகக் கொண்ட தமிழ் இலக்கிய சமூகவரலாற்றியலின் கூரிய ஆய்வுப்பார்வைக்கு இவற்றை உட்படுத்தி இவ்வறிவுத்துறைகள் பற்றி அவரது பல்வேறு ஆக்கங்களிலும் பேராசிரியர் ஆக்கபூர்வமாகக்கருத்துத் தெரிவித்திருக்கின்றார். தென்னாசியப் பூகோள சமூக, சமய, அரசியல் நிலப்பரப்பையே பெருமளவில் இவர்தம் ஆய்வுப் புலமாக வரையறை செய்து கொண்டார்.

வருங்காலத் தமிழ்ப் புலமையுலகில் பேராசிரியரின் கட்டுரைகள், கருத்துரைகள், நூல்கள், ஏனைய ஆய்வுப் பங்களிப்புகள், தனித்துவமான அவரது தமிழ் இலக்கிய விமரிசனச் செல்நெறிகள், சமய சமூகக் கருத்து நிலைகள் போன்றவை சார்ந்த வரன்முறைப்பட்ட ஆய்வுகள் இவரது மாணவர்களாலும் இன்னும் தமிழகத்தில் பேராசிரியரின் இலக்கிய சமூக ஆய்வுவட்டத்தைச் சார்ந்த அறிஞர்கள் நண்பர்களினாலும் புலமை மரபுகளுக்கேற்ப முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இத்தகைய ஆய்வுகள் தமிழ்ப்புலமையுலகிற்கு பெருவளம் சேர்ப்பவையாகும்.

பேராசிரியரின் கலைப்புலமையும், ஆசிரிய ஆளுமையும், ஆய்வுத் தேடலும் பல்கலைப் பரிமாணம் கொண்டவை. நீண்டகாலப் போராட்ட சூழலினால் சிதைவுற்று மாற்றமடைந்துவரும் ஈழத்தமிழ்ச் சமூகம் பற்றிய பல்வேறு விடயங்களையும், பிராந்திய, சாதிய, சமயப் பாகுபாடுகளையும் திறந்த மனத்துடன், கட்டற்ற நிலையிலமைந்த ஆய்வறிவிற்குகந்த முறையில் கலந்துரையாட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார். பேராசிரியரின் சமூகப்பார்வை, மற்றும் அவரது கலை இலக்கியப் பரிமாணம், அவரிடத்து இயல்பாகவே இணைந்திருக்கும் மானிட நேயம் ஆதியன அவரது ஆக்கங்களுக்கு புதிய வலுவைக்கொடுத்தன.

1990ம் ஆண்டு யூன் மாதம் ஈழப் போரின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியது. இதன் விளைவாக யாழ்ப்பாணச் சமூகம் யாழ் குடாவிற்குள் ஒரு மூடப்பட்ட முடக்கப்பட்ட சமூகமாகவே வாழும் நிர்ப்பந்தமேற்பட்டது. வானொலி வாயிலாக வருபவற்றைத் தவிர வேறெந்த உலகத் தொடர்பும் அற்ற நிலை ஐந்து வருடங்களுக்குமேல் அங்கு நிலவியது. இன்னும் 1990 முதல் 1995 வரையான கால எல்லைக்குள், ஆக்க இலக்கியப் படைப்பாளியும், முன்னைநாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியுமான மறைந்த அன்புசால் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களுடனும் போராசிரியர் சிவத்தம்பியுடனும் ஓரிரு தடவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலிக் கடலேரி ஊடாக கொழும்புப் பயணத்தில் இணைந்து சென்றோம். சுவாரசியமானதும் அறிவுக்கு இதம் அளிப்பவையுமான இந்தப் பயண அனுபவங்கள் இன்றும் என் அடிமனதில் அருமையான நினைவுகளாக தேங்கிப் படர்ந்துள்ளன. இருநாட்களுக்கு மேல் நீடிக்கும் இந்தக் கடல்வழி, தரைவழிப் பயணங்கள் பேராபத்துகளுக்கும் பேரிடர்களுக்கும் மத்தியிலேயே மேற்கொள்ளப்படுபவை. பேராசிரியரின் உள்ள உறுதியையும், மற்றும் மூடுபாடுகளையும், தடைகளையும் உடைத்தெறியும் மனநிலையிலான அவரது புலமைத் துணிவிற்கும், அறிவுத் தேடலின் ஆதங்கத்திற்கும் இந்தப் பயணங்கள் ஒருவகையில் காத்திரமான

மறுபக்கம் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர்...

குறியீடுகளாய் அமைந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவுத் தூண்களாகவும் சமூக - மானிட நேயத்தின் அரண்களாகவும் விளங்கிய இந்த இரு பெருமனிதர்களுடன் பயணம் செய்தமையினாலும் அவர்களோடு பன்னிலைப்பட்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டமையினாலும் பெற்றவை எழுத்திலடங்காதவை. பேராசிரியரின் புலமைத்தளத்தின்

தனித்துவமிக்க ஒருசில ஆய்வுக் கருத்தமைவுகள் பற்றி சில குறிப்புகள் இங்கு கூறவிரும்புகின்றேன்.

தற்காலத் தமிழ் இலக்கிய விமர்சனத்துறை விரிவாக்கம் பெற்று வளர்வதற்காய் பேராசிரியர் சிவத்தம்பியும், மறைந்த பேராசிரியர் க. கைலாசபதியும் ஆற்றிய பங்களிப்புகள் பற்றி ஈழத்திலும் தமிழகத்திலும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளும் இலக்கிய ஆய்வாளர்களும் விதந்து பேசுவதும் எழுதுவதுமுண்டு. மார்க்சிய தத்துவவார்த்தைக் கோட்பாடு களைத் தனது கருத்து நிலையின் பற்றுக்கோடாகக் கொண்டு இலக்கியப் பகுப்பாய்விலும், விமரிசனத்திலும் ஈடுபட்ட பேராசிரியர், மானிடவியல், சமூகவியல் சமயவியல், அரசறிவியல் போன்ற ஆய்வுத் தூலங்களின் பின் புலத்திலேயே தமிழ் இலக்கியத்தின் நிகழ்கால, வருங்கால செல்நெறிகள் பற்றித் தீர்க்கமாகக் கருத்துத் தெரிவித்தார். இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் பிரிக்கப்பட முடியாத பிணைப்பும் உறவும் உள்ளதென்பதனைத் தமது எடுகோளாகக் கொண்டு பல்துறைச் சங்கம ஆய்வுநெறி வழியாக அதனை நிரூபித்துக் காட்டினார். இவ்வாய்வுத்துறையில் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

இலக்கியப் படைப்புகளில் ஈடுபடுபவர்களுக்கு தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் பிரச்சனைகள் பற்றிய அறிவும் தெளிவும் அதனை இலக்கிய நிலப்படுத்தும் திறனும் இருத்தல் வேண்டும் என்பதனைத் தமது எழுத்துகள் வழியாக வலியுறுத்தினார். (காண்க, கா. சிவத்தம்பி, *இலக்கியமும் கருத்து நிலையும்*, 1982, பக். 20) எனவேதான் "மிகுதிறனுடைத்தான ஆக்க இலக்கியம்" வாழ்க்கை பற்றிய விமரிசனமாகவே அமையும் என உரமான உள்ள உறுதியோடு சுட்டிக்காட்டினார். அத்தகைய இலக்கியம் முகிழ்க்கவும் வளரவும் மானிடவியல், சமுகவியல் சார்ந்த அவரது தனித்துவம் வாய்ந்த விமரிசன நெறிகளினூடாக வழிசமைத்தார்.

தமிழ்ச் சமூகம் பற்றிய விமரிசகப் புலமை
இந்திய உபகண்டத்தில் பேச்சு வழக்கிலுள்ள மொழிகளுள் மிகத் தொன்மை வாய்ந்த இலக்கியத் தொடர்ச்சியைக் கொண்டிருக்கும் ஒரே மொழி தமிழ்தான் என்பதனை கோடிட்டுக் காட்டும் அதேவேளையில், தொன்மை பற்றிப் புகழ் பாடுவதிலும் பார்க்கத் தமிழின் தொடர்ச்சியை நிலைநிறுத்தும் ஆக்க இலக்கியப் பணிகளில் ஈடுபடுவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணவேண்டியதன் அவசியத்தை *இலக்கியமும் கருத்து நிலையும்* ' போன்ற தமது நூல்களின் வாயிலாக வற்புறுத்தி எழுதினார். தமிழ் ஆய்வாளர்களிடத்தில் விமரிசகப் புலமை (critical scholarship) வளர வேண்டியதன் தேவையை விளக்கியதோடு இத்தகைய விமரிசன நோக்கு தமிழ்ச் சமூகத்தின் இன்றைய காலகட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டியதன் அத்தியாவசியத்தை உறுதியோடு எடுத்துக் கூறினார். பேராசிரியரின் அண்மைக்கால ஆக்கங்களில் நான் ஆர்வத்தோடு விரும்பி படித்த நூல், *யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை (2000)* என்பதாகும். பேராசிரியரின் தனிப்பட்ட வாழ்வநுபவங்களினதும், கருத்து வளங்களினதும், கவலை தோய்ந்த இதய ஆதங்கங்களினதும், புலமை வேட்கையினதும், கருத்துநிலைப் போராட்டங்களினதும் பிழிசாறாக இந்நூல் விளங்குகின்றது.

"தமிழ்த் தேசியம்", "தமிழ்ச் சமூக உருவாக்கம்", "தமிழ் சமூக அடிநிலை மாற்றம்", "தமிழ்ச் சமூக குடும்ப கட்டமைவுகளின் சிதைவு", "தமிழ் சமூகத்திற்கிடையிலான சாதி, மதப் பிளவுகள்" போன்றவை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இன்று புலமைச் சூழலிலும், அதற்கு அப்பால் தனிப்பட்ட எழுத்தாளர், மற்றும் குழுமங்களுக்கிடையிலான சொற்போராகவும் ஈழத்தமிழ் மண்ணிலும் அதற்கு அப்பால் ஈழத்தமிழர் வாழும் பலநாடுகளிலும், வாழ்வுக் களம் முதல் இணையத்தளம் ஈறாக இடம்பெறுவதனைக் காண்கிறோம். இதனை மனங்கொண்டு பேராசிரியர் இந்நூலில் கூறும் அறிவுரைகளும், எச்சரிக்கைகளும் நுனிந்து நோக்கத்தக்கவை. இவை ஆரோக்கியமான தமிழ்ச்சமூக அசைவியக்கத்திற்கும் மாற்றத்திற்கும் ஆதர்ஷமாக அமைபவை. புலமைத்தன்மையிலாய "ஒரு திறந்த சொல்லாடலை" வேண்டியே *யாழ்ப்பாணம்: சமூகம் , பண்பாடு, கருத்துநிலை* என்ற இந்நூலினைப் பேராசிரியர் எழுதியுள்ளார். இத்தகைய திறந்த சொல்லாடல் எமது சமுகத்திலும், ஏன் பல்கலைக்கழக மட்டத்தில் தானும் இல்லாததால் தமிழ்ச் சமூகம் அநுபவித்துள்ள இன்னல்கள் இடர்களைச் சுட்டிக் காட்டி இதற்கும் புலமை நிலைப்பட்ட சமூகவியல், வரலாறு வழிவரும் காரணங்கள் உண்டு என விபரித்துள்ளார்.

காலங்காலமாகத் தமிழ்ச் சமூகத்தில் நிலவும் படிநிலை அடுக்கமைவுப் (hierarchy) பண்பு காரணமாக, சமூக அதிகாரங்களை நாங்கள் இழக்கத் தயாராகவில்லை என்றும் நமது அடையாளங்களை குடும்பம், சாதி என்ற அலகுகளில் மட்டுமே வளர்த்துக் கொள்கிறோம் என்பதனைக் கூறி இதனால் எமக்குள்ளேயே ஒருவித ஒதுங்கல் நிலையைக் கடைப்பிடிக்கிறோம் என்றும் இந்நூலில் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றார்.

கலைச்சொல்லாக்கமும் மொழிவளர்ச்சியும்
மாற்றமும், வளர்ச்சியும், தளர்ச்சியும் மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை. மனித பண்பாடுகள் அனைத்தினுடையதும் வாகனமாக வழக்கிலிருக்கும் மொழி, மனித உறவாடல்களினதும், உரையாடலினதும் இணை பொருளாக இயங்கி வருதல் கண்கூடு. மொழி பட்டறிவின் வெளிப்பாடு என்பதிலும் பார்க்க மொழியே ஒருவகைப்பட்ட அநுபவம் என்பது பொருத்தமானது. இந்த உண்மையை உள்ளும் புறமும் விளங்கிக்கொண்ட நிலையிலேயே பேராசியர் சிவத்தம்பி, பலநூறு புதிய சொல்லாக்கத்தினதும் சொற் பிரயோகத்தினதும் ஆக்க கர்த்தாவாக விளங்கினார். செல்நெறி (trend) செந்நெறி (classical) இருகிளைப்பாடு (dichotomy) பிராரம்பம் (preliminary) உசாவல் (theoretical investigation) போன்ற பல புதிய சொற்களைத் தமது விரிவுரைகளிலும், எழுத்தாக்கங்களிலும் இயல்பாகவே இணைத்து வந்தவர்.

மதமும் மானிடநேயமும்
இலக்கியத்தின் சமூகத் தன்மைபற்றி விமரிசனம் செய்வதோடு தமது ஆசிரிய கல்விப்பணி முடிந்ததெனக் கருதியவரல்ல. சமூகப் பிரச்சனைகளை உள்வாங்கி உருவாகும் இலக்கியமே உயிரூட்டமுள்ளது என்ற வகையில் சமூகச்சிக்கல்கள் பிரச்சினைகளோடு மிகவும் ஈடுபாடு கொண்ட ஒருவராகவே இவர் திகழ்ந்தார். தமிழ்ச் சமூகத்தின் அவலங்கள்,

(30ஆம் பக்கம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

49

## உடம்பார் அழியில் உயிரார் அழிவர்

திருமூலர் திருமந்திரத்தில் சொல்லும் கருத்துக்கள் மாயாவாதத்திற்கு நேர் முரணான மெய்ம்மை வாதத்தை அடி நிலையாகக் கொண்டவை. திருமூலர் ஒரு சித்தர். திருமந்திரத்தைத் 'தந்திரம்' என்றும் கூறுவதுண்டு. தந்திரம் என்பது இந்தியாவிலே பண்டுதொட்டு வளர்ந்து வந்த ஒரு வழிபாட்டு முறை. இவ்வுடலின் துணைக்கொண்டே - இவ்வுடலின் மூலமாகவே - பேரின்பத்தை அடையும் உண்மையைக் காட்டுவன யோகம், தந்திரம் முதலியன. கிரியைகள், சடங்குகள், மந்திர உச்சாடனங்கள், உடற்பயிற்சி, உடல்வலிமை முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டன.

யோகமும், தந்திரமும், மனித உடலுக்கு உண்மை - மெய் என்னும் பெயரை மெய்யாகக் கூறியவர்கள் தந்திரவாதிகள். அந்தளவிற்கு அவர்கள் மெய்மை வாதிகள்.

சித்தர்களின் இப்பண்புகளைப் பற்றிச் சாமி சிதம்பரனார் என்ற தமிழறிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

"சித்தர் பாடல்களை ஆழ்ந்து படித்தால், அவர்கள் வைதிக மதத்திற்கு எதிரானவர்களாகவே காணப்படுகின்றனர். வைதிக மதக் கொள்கைகள் பலவற்றைத் தாக்குகின்றனர். ஆனால் அவர்கள் தங்களை நாத்திகர் என்றோ, உலகாயதர்கள் என்றோ வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. வெளிப்படையாகப் பாடவில்லை. கடவுள் அன்பர்கள் போலவே காட்சியளிக்கின்றனர். ஆயினும் சித்தர்களின் பாடல்களிலே உலகாயதத்தை - நாத்திகத்தைப் பற்றிய கண்டனங்களும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அறிவியலாளர்களும் ஆன்மா தனித்த ஒரு பொருள் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. ஆன்மா என ஒன்று தனியாக மதவாதிகள் சொல்லுகின்ற படி அழியாத தனிப்பொருளாக இல்லையென்பதே பல அறிவியலாளர்களது கருத்து. சித்தர்களின் கொள்கை இதற்கு ஒத்திருப்பதைக் காண்கிறோம்."

சித்தர்களைப் பற்றிக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து அவர்களது இரசாவாதத்தைப் பற்றிக் கும்பகோணம் கே.சி. வீரராகவ அய்யர் தாம் எழுதிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். அதில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பெரும்பாலான சித்தர்கள் சங்கரரின் ஒருமைவாதத் தத்துவத்தையும் இந்துக்களின் விக்கிரக வழிபாட்டையும் எதிர்த்து மறுத்தவராகவே காணப்படுகின்றனர்."

இவ்வாறு சித்தர்கள் வைதிக சமயத்தை எதிர்த்து நிற்கவும் வைதிக நெறியினரும் அவர்களைத் தள்ளி வைத்தனர். அண்மைக் காலம் வரை சைவ சித்தாந்திகளும் சித்தர் நூல்களை விலக்கி வைத்திருந்தனர். தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய கா.சு. பிள்ளை முதலிய சிலரே சித்தர் பாடல்களும் கற்கத் தகுந்தன எனக் கூறுத் தொடங்கினர். மரபு வழி வரும் கருத்துக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் மேற்கோள்கள் அமையும்.

"................உடம்பொடு
செத்திட்டு இருப்பர் சிவயோகிகள்
"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்."
"உறுதுணையாவது உயிரும் உடம்பும்."
"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்."

சித்தர்கள் மீவியற்கை (supernatural) சக்திகள் உடையவர்கள் என்று சிலர் இயம்புவதுண்டு. எனினும் இவர்கள் உலகாயுத இயல்புகளை சிறப்பாக அறிந்து பயன்படுத்தினர் என்பதுவே தகும். இவர்களின் மருத்துவ, கணித, இரசவாத தத்துவ, இலக்கிய, ஆத்மீக ஈடுபாடுகள் வெளிப்பாடுகள் இவர்களின் உலகாயுத பண்பை எடுத்தியம்புகின்றன. ஆயினும் இவர்கள் வெறும் பொருளியல்வாதிகள் அல்ல. "மெய்ப்புலன் காண்பது அறிவு" என்பதற்கிணங்க, உண்மை அல்லது நிச நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள்.

சித்தர்களை அடையாளப்படுத்துவதோ, வரையறுப்பதோ கடினம். ஏனென்றால், ஒவ்வொருவரின் தனித்துவமும் மரபை மீறிய போக்குமே சித்தர்களின் வரைவிலக்கணம். தரப்படுத்தலுக்கோ, வகைப்படுத்தலுக்கோ இலகுவில் சித்தர்கள் உட்படுவதில்லை. எனினும் தமிழ் சூழலில் வரலாற்றில் சித்தர்கள் என்பவர்கள் என்றும் இருக்கின்றார்கள்.

சாதி சமயம் சாத்திரம் சடங்குகள் மீறிய உலக நோக்கு, பொது இல்லற துறவற வாழ்முறைகளில் இருந்து வேறுபட்ட வாழ்வு முறைகள், விந்தையான செயல்கள், பட்டறிவுத் தமிழ், சீரிய ஆராய்ச்சி ஆகிய அம்சங்கள் சித்தர்களை வருணிப்பன எனலாம். அப்படிப்பட்ட மேலோட்டமான வருணிப்புக்களுக்கு மேலாக, சித்தர்கள் என்பவர்கள் சித்தி அடைந்தவர்கள். தங்கள் இருப்பை (existence) உடம்பை, சிந்தையை, சுற்றத்தை, இவ்வுலகின் இயல்பை நோக்கி தெளிவான புரிதலை (understanding) அறநிலை உணர்வை (external awareness) மெய்யடைதலை (actuality) சித்தி எய்தல் எனலாம்.

சித்தர்களை புலவர்கள், பண்டாரங்கள், பண்டிதர்கள், சன்னியாசிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஓதுவார்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அரசர்கள், மறவர்கள், புலமையாளர்கள், அறிவியலாளர்கள் பொதுமக்கள் ஆகியோரிடம் இருந்து வேறுபடுத்தி அடையாளப்படுத்தலாம். சித்தர்களின் மரபை, கோயில் வழிபாடு, சாதிய அமைப்பை வலியுறுத்தும் சைவ மரபில் இருந்தும் உடலையும் வாழும்போது முக்தியையும் முன்நிறுத்தாமல் "ஆத்மன்", சம்சாரம் போன்ற எண்ணக் கருக்களை முன்நிறுத்தும் வேதாந்த மரபில் இருந்தும் வேறுபடுத்திப் பார்க்கலாம். இன்று, சித்தர் மரபு அறிவியல் வழிமுறைகளுடன் ஒத்து ஆராயப்படுகின்றது. எனினும், சித்தர் மரபைத் தனி அறிவியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது அதன் பரந்த வெளிப்படுத்தலை, அது வெளிப்படுத்திய சூழலை புறக்கணித்து குறுகிய ஆய்வுக்கு இட்டு செல்லும். சித்தர்களின் கொள்கை இறைவன் எங்கும் தனியாக இல்லை. நமது உடம்பு தான் இறைவனின் இடம். ஆதலால் கடவுளைத்தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பைப் பேணுவதே இறைவன் பணி, உடம்பினுள்ளேயே இறைவனைக் கண்டு மகிழ்ந்திரு என்பது சித்தர் கொள்கை. இதனைத் திருமூலர் சில தத்துவப் பாடல்கள் மூலம் விளக்குகிறார்.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

